8809.1
83292
83273

ஸ்ரீ ஞானவாசிட்டம்

உரை

1890

12791

GOPAL PILL

திருச்சிற்றம்பலம்.

# திருவானைக்காவுலா.

அகிலாண்டேஸ்வரி வரப்பிரசாதியாகிய

## காளமேகப்புலவர்

அருளிச்செய்தது.

12791

பூவை,
அஷ்டாவதானம்
**கலியாணசுந்தரமுதலியாரால்**
பார்வையிடப்பட்டு,
திரிசிரபுரஞ்சரப
ம-ா-ா-ஸ்ரீ, ஒண்டி முத்தையபிள்ளையவர்கள்
குமாரரும
மணப்பாறைடிப்டிதாசில்தாராபீஸ
கிளார்க்குமாகிய ம-ா-ா-ஸ்ரீ
**ஒ. முத்தையபிள்ளையவர்களால்**

சென்னை:
இந்து தியலாஜிகல் யந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது
விகிரிதி௵ புரட்டாசிமீ

இதன்விலை அணா-௩

Registered Copy-right.

1890.

12771

உ

கணபதிதுணை

திருச்சிற்றம்பலம்

# திருவாணைக்காத்தேவாரம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

பண் - இந்தளம

திருச்சிற்றம்பலம்.

மழையார்மிடறுமழுவாளுடையா
யுழையார்கரவாவுமையாளகணவா
விழவாருமவெணணாவலினமேவியவெம்
மழகாவெனுமாயிழையாளவளே. (௧)

கொலையாகரியினனுரிமூடியனே
மலையாசிலையாவளைவிததவனே
விலையாலெனையாளுமவெணணாவலுளாய
கிலையாவருளாயெனுநேரிழையே (௨)

காலாலுயிாகாலனைவீடுசெயதாய
பாலோடுநெயயாடியபாலவணனே
வேலாடுகையாயெமவெணணாவலுளா
யாலாநிழலாயெனுமாயிழையே. (௩)

சுறவககொடிகொணடவனீறதுவா
யுறநெற்றிவிழிததவெழுததமனே
விறனமிகககரிககருளசெயதவனே
யறமிககதுவெனனுமெனுயிழையே (௪)

செஙகட்பெயர்கொணடவனசெம்பியாகோ
னஙகட்கருணைபெரிதாயவனே
வெஙகணவிடையாயெமவெணணாவலுளா
யஙகததயாவாயினளாயிழையே. (௫)

குன்றேயமாவாயகொலையாபுலியின்
றனறோலுடையாய்சடையாயபிறையாய
வெனறாயபுரமூனறைவெணணாவலுளே
நினறாயருளாயெனுநேரிழையே. (௬,௭)

மலையன்றெடுததவரககனமுடிதோ
டொலையவ்விரலூனறியதூமழுவா
விலையாலெனையாளுமவெணணாவலுளா
யலசாயனலகாயெனுமாயிழையே (௮)

திருவாரதருநாரணனானமுகனு
மருவாவெருவாவழலாயநிமிாநதாய்
விரையாருமவெணணாவலுண்மேவியவெம
மரவாவெனுமாயிழையானவளே. (௯)

புததர்பலரோடமண்பொயததவர்க
ளொததவ்வுரைசொலலிவையோரகிலார்
மெய்ததேவாவணஙகுமவெணணாவலுளா
யததாவருளாயெனுமாயிழையே. (௧௦)

வெணணாவலமாந்துறைவேதியனைக்
கணணாசமழ்காழியர்தநதலைவன்
பண்ணோடிவைபாடியபததுமவலலா
விண்ணோரவரோததவிருமபுவரே (௧௧)

திருசசிறறமபலம்.

---

## திருவிராகம்

பண - கௌசிகம.

---

திருசசிறறமபலம்

வானைக்காவில்வெணமதிமலகுபுலகுவாாசடைத
தேனைககாவிலினமொழிததேவிபாகமாயினா
னைககாவிலணணலையபயமாகவாழ்பவ
ரேனைககாவலவேணடுவாாகமகேதுமேதமிலலையே. (௧)

சேறுபட்டதணவயற்சென்றுசெனறுசேணுலா
வாறுபட்டநுணடுறையானைககாவிலணணலார
நீறுபட்டமேனியாரநிகரிலபாதமேததுவார
வேறுபட்டசிநதையாரவிணணிலெணணவல்லரே. (௨)

தாரமாயமாதராடானொரபாகமாயின
னீரமாயபுனசடையேறறதிஙகளசூடின
னூரமாயமாபுடையானைககாவிலணணலை
வாரமாயவணஙகுவார்வலவினைகணமாயுமே (௩)

விணணினண்ணுபுலகியவீரமாயமாலவிடைச
சுணணவெணணீறாடினனசூலமேநதுகையின
னணணலகணணொரமூனறினனானைககாவுகைதொழ
வெணணுமவணணம்வலலவாககேதமொனறுமிலலையே (௪)

வெயயபாவஙகைவிடவேணடுவீரகளாண்டசீர
மைகொளகணடனவெயயதீமாலையாடுகோசலான
கொயயவிணடநாணமலாககொனறைதுனறுசெனனியெம
மையனமேயபொயகைசூழானைககாவுசோமினே. (௫)

நாணுமோரவுசாவுமுன்னகையுமுட்குநனமையும்
பேணுறாதசெலவமுமபேசநினறபெறறியா
னுணுமபெணணுமாகியவானைககாவிலணணலார
காணுஙகணணுமூனறுடைககறைகொணமிடறனல்லனே. (௬)

கூருமாலைநணபகறகூடிவலலதொணடர்கள்
பேருமூருஞசெலவமுமபேசநினறபெறறியான
பாருமவிணணுஙகைதொழப்பாயுஙகஙகைசெஞசடை
யாரநீரோடேநதினானைககாவுசோமினே. (௭)

பொனனமல்குதாமரைப்போதுதாதுவணடின
மனனமலகுதணடுறையானைககாவிலணணலைப
பன்னவலலநானமறைபாடவலலதனமையோர
முன்னவலலாமொயகழறுனனவலலாவினையே. (௮)

ஊனொடுண்டனனெறனவுணொடுணடறீதென
வானதொணடரன்பினுறபேசநினறதனமையான்

வானொடொன்றுசூடினான்வாய்மையாகமன்னிநின்
றூனொடுஞ்சுமாடினானானைக்காவுசேர்மினே. (௯)

கையிலுண்ணுமுகையருங்கடுக்கடினகழுக்களு
மெய்யைப்போர்க்குமபொய்யரும்வேதநெறியையறிகிலா
னைதையலபாகமாயினானழலதுருவத்தானெங்க
ளையனமேயபொய்கைசூழானைக்காவுசோமினே. (௧0)

ஊழிபூழிவையகத்துயிர்கடோற்றுவானொடு
மாழியானுங்காணகிலாவானைக்காவிலண்ணலைக
காழிஞானசமபநதனகருதிசசொன்னபததிவை
வாழியாககக்கற்பவாவலவினைகண்மாயுமே (௧௧)

திருச்சிற்றமபலம

## திருக்கயிலாயமுந் திருவானைக்காவுந் திருமகேந்திரமுந்
## திருவாரூருங்கூடற்சதுக்கம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணதுவுண்டரிமலரோன்காணா
வெண்ணாவல்விரும்புமகேந்திரருங்
கண்ணதுவோங்கியகயிலையாரு
மண்ணலாரூராதியானைக்காவே. (௧)

வந்துமாலயனவாகாணபரியார்
வெந்தவெண்ணீறணிமகேந்திரருங
கந்தவாரசடையுடைக்கயிலையாரு
மந்தணாரூராதியானைக்காவே. (௨)

மாலயன்றேடியமகேந்திரருங
காலனையுயிர்கொண்டகயிலையாரும
வேலையதோங்கும்வெண்ணாவலாரு
மாலையாரூராதியானைக்காவே. (௩)

கருடனையேறரியயனோர்காணா
வெருள்விடையேறியமகேந்திரருங
கருடருகண்டத்தெங்கயிலையாரு
மருளாரூராதியானைக்காவே. (௪)

மதுசூதனனான்முகன்வணங்கரியார்
மதியதுசொலவியமகேந்திரருவ
கதிரமுலைபுல்கியகயிலையாரு
மதியனாரூராதியானைககாவே (௫)

சககரமவேணடுமால்பிரமன்காணா
மிககவாகயிலைமகேந்திரருந்
தககனைததலையரிதழலுருவ
ரககணியவராரூராதியானைக்காவே. (௬)

கணணனுநானமுகன்காண்பரியார
வெணணாவலவிருமபுமகேந்திரருங்
கணணபபாககருளசெயதகயிலையெஙக
அணணலாரூராதியானைககாவே (௭)

கடலவணணனானமுகனகாண்பரியார
தடவரையரககனைத்தலைநெரித்தார
விடமதுவுண்டவெம்மகேந்திரரு
மடலவிடையாரூராதியானைக்காவே. (௮)

ஆதிமாலயனவாகாண்பரியார்
வேதஙகடுதிசெயுமகேந்திரரு
காதிலொர்குழையுடைக்கயிலையாரு
மாதியாரூரெநதையானைக்காவே. (௯)

அறிவிலமணபுததரறிவுகொள்ளேல
வெறியமானகரததாரூாமகேந்திரரு
மறிகடலோனயன்றேடததானு
மறிவருகயிலையோனானைக்காவே (௧0)

எனமாலயனவாகாண்பரியார
கானமாாகயிலைநனமகேந்திரரு
மானவாரூராதியானைக்காவை
ஞானசமபந்தனறமிழ்சொல்லுமே. (௧௧)

திருசசிறறமபலம்

---

# திருவானைக்காத்தேவாரம்.

## திருநாவுக்கரசுநாயனார்.

### திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்'

கோனைக்காவிக்குளிர்ந்தமனத்தராய்த
தேனைக்காவியுண்ணார்சிலதெண்ணர்க
ளானைக்காவிலெம்மானையணைகிலா
ரூனைக்காவியுழிதர்வரூமரே (க)

திருகுசிந்தையைத்தீர்த்துச்செம்மைசெய்து
பருகியூறலைப்பற்றிபபதமறிந்
துருகினைபவாக்கூனமொன்றினறியே
யருகுநின்றிடுமானைக்காவண்ணலே (உ)

துன்பமின்றிதுயரின்றியெனறுநீ
ரினபயவேணடிவிராப்பகலேதநுமி
னென்பொனீசனிறைவனென்றுள்குவார்க்
கன்பனுயிடுமானைக்காவணணலே. (௩)

நாவனன்றுநறுமலர்ச்சேவடி
யோவாதேததியுளததனடததார்வினை
காவாயெனறுதஙகைதொழுவாாக்கெலா
மாவாவென்றிடுமானைககாவணணலே (௪)

வஞ்சமின்றிவணங்குமின்வைகலும்
வெஞ்சொலின்றிவிலகுமின்வீடற
நைஞ்சுநைஞ்சுநின்றுளகுளிர்வார்கடெகலா
மஞ்சலென்றிடுமானைக்காவணணலே. (ரு)

நடையைமெய்யென்றுநாத்திகம்பேசாதே
படைகள்போல்வரும்பஞ்சமாபூதங்க
ளடையொன்றின்றியேதன்னடைந்தார்க்கெலா
மடையநின்றிடுமானைக்காவண்ணலே. (சா)

ஒழுகுமாடத்துளொன்பதுவாய்தலுங
கழுகரிப்பதனமுன்னங்கழலடி

தொழுதுகைகளாற்றூமலர்தூவிநின்
றழுமவர்க்கன்பனானைக்காவண்ணலே. (எ)

உருளும்போதறிவொண்ணாவுலகத்தீர்
தெருளுஞ்சிகனெனத்தீவினைசேராதே
யிருளறுததுநின்றீசனெனபாரகெலா
மருள்கொடுத்திடுமானைககாவணணலே. (அ)

நேசமாகிநினைமடநெஞ்சமே
நாசமாயகுலநலஞ்சுறறஙகள்
பாசமற்றுப்பராபரவானநத
வாசையுறறிடுமானைககாவண்ணலே. (கூ)

ஓதமாகடல்சூழிலங்கைக்கிறை
கீதங்கின்னரம்பாடகெழுவினான்
பாதம்வாஙகிப்பரிந்தருள்செய்தங்கோ
ராதியாயிடுமானைக்காவண்ணலே. (க0)

திருச்சிற்றம்பலம்.

## திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

எத்தாயரெத்தந்தையெச்சுற்றத்தா
ரெம்மாடுசும்மாடாமேவாநல்லார்
செததால்வந்துதவுவாரொருவரிலலைச்
சிறுவிறகாற்றீமூட்டிச்செலலாநிற்பர்
சிததாயவேடததாயநீடுபொன்னித
திருவானைக்காவுடையசெல்வாவெனற
னததாவுன்பொற்பாதமடையப்பெறறா
லலலகண்டஙகொணடடியேனெனசெய்கேனே. (க)

ஊனாகியுயிராகியதனுணின்ற
வுணர்வாகிப்பிறவனைததுநீயாய்நின்றாய்
நானேதுமறியாமேயென்னுள்வநது
நல்லனவுநதீயனவுங்காட்டாநின்றாய்

தேனாருங்கொன்றையனேநின்றியூராய்
  திருவானைக்காவிலுறைசிவனேஞான
மானாயுன்பொற்பாதமடையப்பெற்றா
  லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௨)

ஒப்பாயிவ்வுலகத்தோடொட்டிவாழ்வா
  னொன்றலாத்தவத்தாரோடுடனேநின்று
துப்பாருங்குறையடிசிற்றுற்றற்றன
  றிறமறந்துதிரிவேனைக்காத்துநீவந்
தெப்பாலுநுண்ணுணர்வேயாகியென்னை
  யாண்டவனேயெழிலானைக்காவாவானோ
ரப்பாவுன்பொற்பாதமடையப்பெற்றா
  லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே (௩)

நினைத்தவர்கணெஞ்சுளாய்வஞ்சக்கள்வா
  நிறைமதியஞ்சடைவைத்தாயடையாதுன்பால்
முனைத்தவர்கள்புரமூன்றுமெரியச்செற்றாய்
  முன்னானைத்தோல்போர்த்தமுதல்வாவென்றுங்
கனைத்துவருமெருதேறுங்காளகண்டா
  கயிலாயமலையாய்நின்கழலேசேர்ந்தே
னனைத்துலகுமாள்வானேயானைக்காவா
  வல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௪)

இமமாயப்பிறப்பென்னுங்கடலாந்துன்பத்
  திடைச்சுழிப்பட்டிளைப்பேனையிளையாவண்ணங்
கைம்மானமனத்துதவிக்கருணைசெய்து
  காதலருளவைவைத்தாய்காணநில்லாய்
வெம்மானமதகரியினுரிவைபோர்த்த
  வேதியனேதென்னானைக்காவுண்மேய
வம்மானின்பொற்பாதமடையப்பெற்றா
  லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௫)

உரையாரும்புகழானேயொற்றியூராய்
  கச்சியேகம்பனேகாரோணத்தாய
விரையாருமலர்தூவிவணங்குவார்பான
  மிக்கானேயக்கரவமாரம்பூண்டாய்

திரையாரும்புனற்பொன்னித்தீர்த்தமலகு
திருவானைக்காவிலுறைதேனேவானோ
ரரையாவுன்பொற்பாதமடையப்பெற்று
லலலகணடஙகொணடடியேனெனசெய்கேனே. (௬)

மையாருமணிமிடற்றாயமாதோர்கூறாய்
மான்மறியுமாமழுவுமனலுமேந்துங்
கையானேகாலனுடன்மாளசசெறற
கஙகாளாமுனகோளும்விளைவுமானாய்
செயயானேதிருமேனியரியாய்தேவா
குலககொழுநதேதென்னானைககாவுண்மேய
ஐயாவுனபொற்பாதமடையப்பெற்று
லலலகணடஙகொணடடியேனெனசெய்கேனே. (௭)

இலையாருஞ்சூலததாயெண்டோளானே
யெவ்விடததுநீயலாதிலலையென்று
தலையாரககும்பிடுவார்தன்மையானே
தழனமடுததமாமேருக்கையிலவைதத
சிலையானேதிருவானைககாவுண்மேய
தீயாடீசிறுநோயானலிவுணடுள்ள
மலையாதேநினனடியேயடையப்பெறறு
லல்லகணடஙகொணடடியேனெனசெய்கேனே (௮)

விணணாருமபுனல்பொதிசெஞ்சடையாயவேத
நெறியானேயெறிகடலினஞ்சமுண்டா
யெணணாருமபுகழானேயுனனையெம்மா
னெனறெனறேநாவினிலெப்பொழுதுமுன்னிக
கணணாரக்கணடிருக்கக்களிததேப்போதுங
கடிபொழிலசூழ்தெனனானைககாவுணமேய
வணணாநினபொறபாதமடையபபெறறு
லலலகண்டஙகொண்டடியேனெனசெய்கேனே. (௯)

கொடியேயும்வெள்ளேற்றாய்கூளிபாடக
குறட்பூதங்கூத்தாடநீயுமாடி
வடிவேயுமங்கைதனனைவைததமைந்தா
மதிலானைககாவுளாய்மாகாளத்தாய்

படியேயுங்கடலிலங்கைக்கோமான் றன்னைப்
பருமுடியுந்திரடோளுமடர்த்துகந்த
வடியேவந்தடைந்தடிமையாகப்பெற்ற
வல்லகணடங்கொண்டடியேனென்செய்கேனே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

## திருத்தாண்டகம்.

---

திருச்சிற்றம்பலம்.

முன்னானைத்தோல்போர்த்தமூர்த்திதன்னை
மூவாதசிந்தையேமனமேவாக்கே
தன்னானையாப்பண்ணியேறினானைச்
சார்தற்கரியானைத்தாதைதன்னை
யென்னானைக்கன்றினையென்னீசன்றன்னை
யெறிநீர்த்திரையுகளுங்காவிரிசூழ்
தென்னானைக்காவானைதேனைப்பாலைச்
செழுநீர்த்திரளைசென்றாடினேனே. (௧)

மருந்தானைமந்திரிப்பார்மனத்துளானை
வளர்மதியஞ்சடையானைமகிழ்ந்தென்னுள்ளத்
திருந்தானையிறப்பிலியைப்பிறப்பிலானை
யிமையவர்தம்பெருமானையுமையாளஞ்சக்
கருந்தாளமதகளிற்றினுரிபோர்த்தானைக்
கனமழுவாட்படையானைபலிகொண்டூரூர்
திரிந்தானைத்திருவானைக்காவுளானைச்
செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே (௨)

முற்றாதவெண்டிங்கட்கண்ணியானை
முந்நீர்நஞ்சுண்டிமையோர்க்கமுதநல்கு
முற்றானைப்பல்லுயிர்க்குந்துணையானானை
யோங்காரத்துட்பொருளை

பெற்றானைப்பின்னிரக்கஞ்செய்வான்றன்னைப்
  பிரானென்றுபோற்றாதார்புரங்கண்மூன்றுஞ்
செற்றானைத்திருவானைக்காவுளானைச்
  செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. (க)

காராருங்கருமிடற்றெம்பெருமான்றனைக்
  காதில்வெண்குழையானைக்கமழ்பூங்கொன்றைத்
தாரானைப்புலியதளினுடையானைத்
  தானன்றிவேறொன்றுமில்லாஞானப்
பேரானைமணியாரமார்பினானைப்
  பிஞ்ஞகனைத்தெய்வநான்மறைகள்பூண்ட
தேரானைத்திருவானைக்காவுளானைச்
  செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே (உ)

பொய்யேதுமில்லாதமெய்யன்றன்னைப்
  புண்ணியனைநண்ணாதார்புரநீறாக
வெய்தானைச்செய்தவத்தினமிக்கான்றன்னை
  யேறமரும்பெருமானையிடமானேந்துங்
கையானைக்கங்காளவேடத்தானைக்
  கட்டங்கக்கொடியானைக்கனல்போன்மேனிச்
செய்யானைத்திருவானைக்காவுளானைச்
  செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே (௩)

கலையானைப்பரசுதரபாணியானைக்
  கனவயிரத்திரளானைமணிமாணிக்க
மலையானையென்றலையினுச்சியானை
  வார்தருபுன்சடையானைமயானமன்னு
நிலையானைவரியரவுநாணாக்கோத்து
  நினையாதார்புரமெரியவளைத்தமேருச்
சிலையானைத்திருவானைக்காவுளானைச்
  செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே (௪)

ஆதியனையெறிமணியிஞேசையானை
யண்டத்தார்க்கறிவொணுதப்பான்மிக்க
சோதியனைதனுமறையின்பொருளான்றன்னைச்
சுருமபமருமலர்க்கொன்றைத்தொனனூலபூண்ட
வேதியனையறமுரைததபட்டன்றன்னை
விளங்குமலரயன்சிரங்களொநதிலொன்றைச
சேதியனைததிருவானைக்காவுளானைச்
செழுநீர்ததிரளைச்சென்றாடினேனே (எ)

மகிழ்ந்தானைக்கச்சியேகமபன்றன்னை
மறவாதுகழனினைந்துவாழ்த்தியேத்திப
புகழ்ந்தாரைப்பொன்னுலகமாள்விப்பானைப
பூதகணப்படையானைப்புறங்காட்டாட
லுகநதானைப்பிச்சையேயிச்சிப்பானை
யொண்பவளததிரளையென்னுளளததுள்ளே
திகழ்ந்தானைததிருவானைக்காவுளானைச
செழுநீர்ததிரளைச்சென்றாடினேனே (அ)

நசையானைநால்வேதத்தப்பாலானை
நல்குரவுந்தீபபிணிநோய்காப்பானறன்னை
யிசையானையெணணிறைந்தகுணததான்றன்னை
யிடைமருதுமீஙகோயுநீங்காதேற்றின்
மிசையானைவிரிகடலுமண்ணும்விண்ணு
மிகுதீயுமபுனலெறிகாற்றாகியெட்டுத
திசையானைததிருவானைககாவுளானைச
செழுநீரததிரளைசசென்றாடினேனே (கூ)

பாரத்தானைக்காமனுடல்பொடியாய்வீழப்
பண்டயன்மாலிருவர்க்குமறியாவண்ணஞ்
சீரத்தானைச்செந்தழல்போலுருவினானைத்
தேவர்கடம்பெருமானைத்திறமுனாதே
யார்த்தோடிமலையெடுத்தவிலங்கைவேந்த
னணைமையெலாங்கெடுத்தவன்றனிடரப்போதே
தீர்த்தானைத்திருவானைக்காவுளானைச்
செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்திநாயனார்

பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மறைகளாயினநான்குமற்றுளபொருள்களுமெல்லாந்
துறையுந்தோத்திரத்திறையுந்தொன்மையுநன்மையுமாய
வறையுமபூம்புனலானைக்காவுடையாதியைநாளு
மிறைவனென்றடிசேர்வாரெம்மையுமாளுடையாரே (௧)

வங்கமேவியவேலைநஞ்செழவஞ்சாகளகூடித
தங்கணமேலடராமையுண்ணெனவுண்டருளகண்ட
னங்கமோதியவானைக்காவுடையாதியைநாளு
மெங்களீசனென்பார்களெமமையுமாளுடையாரே. (௨)

நீலவண்டறைகொன்றைநேரிழைமங்கையோர்திங்கள்
சாலவாளரவங்கடங்கியசெஞ்சடையெந்தை
யாலநீழலுளானைக்காவுடையாதியைநாளு
மேலுமாறுவல்லார்களெம்மையுமாளுடையாரே. (௩)

தந்தைதாயுலகுக்கோர்தத்துவனமெய்த்தவத்தோர்க்குப்
பந்தமாயினபெருமான்பரிசுடையவர்திருவடிக
ளந்தண்பூம்புனலானைக்காவுடையாதியைநாளு
மெந்தையென்றடிசேர்வாரெம்மையுமாளுடையாரே (௪)

கணைசெந்தீயரவந்நாண்கல்வளையுஞ்சிலையாகத்
துணைசெய்மும்மதின்மூன்றுஞ்சுட்டவனேயுலகுய்ய
வணையும்பூம்புனலானைக்காவுடையாதியைநாளு
மிணைகொள்சேவடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. (௫)

விண்ணின்மாமதிசூடிவிலையிலிகலனணிவிமலன்
பண்ணினேர்மொழிமங்கைபங்கினன்பசுவுகந்தேறி
யண்ணலாகியவானைக்காவுடையாதியைநாளு
மெண்ணுமாறுவல்லார்களெம்மையுமாளுடையாரே (௬)

† தாரமாகியபொன்னித்தண்டுறையாடிவிழுத்து
நீரினின்றடிபோற்றிநின்மலகொள்ளெனவாங்கே
யாரங்கொண்டவெம்மானைக்காவுடையாதியைநாளு
மீரமுள்ளவர்நாளுமெம்மையுமாளுடையாரே (௭)

உரவமுள்ளதொருழையின்னுரிபுலியதளுடையானை
விரைகொள்கொன்றையினானைவிரிசடைமேற்பிறையானை
யரவம்வீக்கியவானைக்காவுடையாதியைநாளு
மிரவொடெல்லியும்பகலுமேத்துவாரெம்மையுடையாரே (௮)

---

† உறையூர்ச் சோழமகாராஜன் பத்தினியார் பதக்கஞ் சாத்திக்கொண்டு காவேரியிலே ஸ்நானஞ் செய்தலும், அது ஜலத்தில் வழுவிப்போக, அவ்வரசர் சிவபெருமானே கொண்டருளும் என்று பிரார்த்திக்க, அது திருமஞ்சனக் குடத்துள்ளே புக, அபிஷேகஞ்செய்யப் பட்டபொழுது அதனைச் சிவபெருமான் அணிந்து அவ்வரசருக்கு அருள்புரிந்தார் என்பதை விளக்குகின்றது இவ்வேழாந் திருப்பாட்டு.

வலங்கொள்வாரவர்தங்கள்வல்வினைதீர்க்குமருந்து
கலங்கக்காலனைக்காலாற்காமனைக்கண்சிவப்பானை
யலங்கனீர்பொருமானைக்காவுடையாதியைநாளு
மிலங்குசேவடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. (கூ)

ஆழியாற்கருளானைக்காவுடையாதிபொன்னடியி
னீழலேசரணாகநினைந்தருள்கூறநினைந்து
வாழவல்லவன்றொண்டன்வண்டமிழ்மாலைவல்லார்போ
யேழுமாபிறப்பற்றுவெம்மையுமாளுடையாரே. (க0)

திருச்சிற்றம்பலம்

சுவாமி திருநாமம் - ஜம்புகேசுவரர்.

தேவி திருநாமம் - அகிலாண்டநாயகி

திருவானைக்காத்தேவார முற்றியது

ஆகத்திருப்பதிகம் - எ

ஐயடிகள்காடவர்கோனயனார்

அருளிச்செய்த

# க்ஷேத்திரத்திருவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

குழீஇயிருந்த சுற்றங் குணங்கள் பாராட்ட
வழீஇயிருந்த வங்கங்க ளெல்லாந்—தழீஇயிருந்து
மென்னானைக் காவா விதுதகா வென்னுமுன
றென்னானைக் காவடைநீ சென்று.

திருச்சிற்றம்பலம்.

உ

முருகக்கடவுடுணை.

சுப்பிரமணியா வரப்பிரசாதியாய்த்

திருவண்ணாமலையில எழுந்தருளியிருந்த

# அருணகிரிநாதசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# திருவானைக்காத் திருப்புகழ்.

*தானததானன தததனதததன—தனதான*

வேலைப்போல்விழி யிடடுமருட்டிகள்
காமக்ரோதம்வி ளைத்திடு துட்டிகள்
வீதிக்கேதிரி பபபரமட்டைகள முலையாலே

மேலிட்டேபொர விட்டபொறிசசிகள்
மாயைததோளைய சைத்துநடப்பிகள
வேளுக்காணமைசெ லுததுசமர்ததிகள் களிகூருஞ்

சோலைககோகில மொததமொழிசசிகள்
காசற்றுரையி ததிலகற்றிகள்
தோலைபபூசிமி னுககியுருககிக ளவரேனும

தோயபபாயல மைக்குமபததிகள்
மோகப்போகமு யககிமயககிகள
சூரைககாரிகள துககவலைப்பட லொழிவேனோ

காலைககேமுழு கிக்குண திககினி
லாதிததாவென வாககியதாபபண
காயத்ரீசெப மர்ச்சனையைச்செயு முனிவோரதங

கானத்தாசிர மததினிலுததம
வேள்விச்சாலைய ழித்தபொருட்டெதி
காதத்தாடகை யைககொல்க்ருபைக்கடன் மருகோனே

யாலைசசாறுகு தித்துவயற்றலை
பாயசசோலைத ழைததகிருத்தல
மாகததேவாகள மெசசியசெய்ப்பதி   யுறைவோனே

வாழிதநோமறுகிப்புடையிறறிரு
நீறிட்டானமதிள சுறறியபொற்றிரு
வானைககாவலி லப்பாடரியப்படு   பெருமாளே.

தநதனதானன தததததததன—தனதானு.

அஞ்சனவேல்விழி யிடடழைக்கவு
மிஙகிதமாகந கைததுருக்கவு
மனபெழவாகுழ லைச்சரிககவு   நகரேகை

யஙகையினமூலம்வெ ளிப்படுத்தவு
மந்தரமாமுலை சற்றசைக்கவு
மம்பரம்வீணில விழ்ததுடுககவு   மிளைஞாகள்

நெஞ்சினிலாசைநெ ருப்பெழுப்பவும்
வம்புரைகூறிவ ளைததிழுக்கவும்
நின்றிடையாடிம ருட்கொடுககவு   மெவரேனு

நிநதைசெயாதுபொ ருட்பறிககவு
மிஙகுவலாகளகை யிறபிணிபபற
நினபதசேவைய னுகரகிப்பது   மொருநாளே

குஞசரமா்முக விககிநப்ரபு
வஙகுசபாசக ரப்ரசிததனொ
கொ(மபனமகோதரன முககணவிககின   கணராயன்

குமபிடுவாாவினை பறறறுப்பவ
னெஙகளவிநாயக னககாபெறறருள
குணடவிருபக கற்பகப்பிளைக   கிளையோனே

தூஞ்சலிலாதவ ரிசசையிற்பெற
வந்தசடானன துட்டநிக்ரக
தும்பிகள்சூழ்வய் விற்றமிழ்ததுறை   பரிபாலா

துங்ககஜாரணி யத்திலுத்தம
சம்புதடாக மடுத்தத்க்ஷண
சுந்தரமான மதிற்புறத்துறை பெருமாளே.

தநதன தானத் தானன—தனதானு

அம்புலி நீரைச் சூடிய
செஞ்சடை மீதிற் றூவிய
வைந்தலை நாகப் பூஷண னருள்வோனே

யன்புட னுவிற் பாவது
சந்தத மோதித் தாடணி
லங்கையி னூனற் பூசனை புரியாமல்

அம்பணி யாரப் பூண்முலை
வஞ்சியர் மாயச சாயலில்
வண்டுழ லோதித் தாழ்குழ லிருகாதின்

மண்டிய நீலப் பார்வையில
வெண்டுகி லாடைச சோலையின
மங்கிய வேழைப் பாவிய னழிவேனோ

கொம்பனை நீலக கோமள
வம்புய மாலைப் பூஷணி
குண்டலி யாலப போசனி யபிராமி

கொஞ்சிய வானைச் சானவி
சங்கரி வேதப பார்வதி
குன்றருள பாலிப் பேரிழை யருளபாலா

செம்பவ ளாயக கூரிதழ்
மின்குற மானைப் பூணமுலை
திண்புய மார்பிற பூரண மணவோனே

செநதமிழ் வாணப் பாவலர்
சங்கிசை யாழைப பாடிய
தெனதிரு வானைக காவுறை பெருமாளே

வேலுமயிலுந்துணை
திருப்புகழ்க்காரன்திருவடிவாழ்க.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# திருவாவணக்காவுலா. *

## விநாயகர்காப்பு.

ஏரானைக்காவிலுறையென்னானைகன்றளித்த
போரானைக்கன்றதனைப்போற்றினால—வாராத
புத்திவருமபத்திவரும்புத்திரசம்பத்துவருஞ
சத்திவருஞ்சித்திவருந்தான்

## நூல்.

### தலச்சிறப்பு.

சீாபெற்றதற்பரமாயச்சிற்பரமாய்ச்சிற்பரந்து
வோபெற்றநாதமாயவிந்துவாய்ப் போபெற்ற
சோதியாயமும்மைச்சொரூபமாயைமபூதத்
தாதியாயெவ்வுயிருமாயினோன வேதத்து
மட்டுப்படாதவளாநதணடவானகனிநத
தெட்டுபட்டிணகொணடெழுநததரு கிட்டுபொரு
ளீவானுமீகெனறிரப்பானுமீயெனவே
யாவானுந்தானுகுமாடலா னேவாது
தானேசகமாகித்தானேபடைத்தளித்துத்
தானேயழித்தருளுந்தமபிரான ஞான
விசிதவடிவாய்விளங்குஞ்சிகர
ரசிதகிரியிலிருநதோன் வசனநெறி

* உலாவாவது இளமைப்பருவமுற்ற தலைமகனைக குலங்குடி பிற
ப்பு மங்கலம்பரமபரை யிவற்றுனினறு னெனபது தோனறத தலைமை
யாய மாதாநெருங்கிய வீதியிடத் தவன பவனிவரப பேதை முதலிய
வேழுபெணகளுஙகணடு தொழுவதாக நேரிசைக கலிவெணபாவிற
கூறுவது.

சம்புதலத்தோன்பாற்றடங்கண்டுசங்கரவென்
றம்புயன்மாதவஞ்செய்தர்ச்சிக்க நம்பும்

பெரு* ஞானபூமிப்பெயர்த்தலத்துக்கெய்த
வருஞானதீட்சையளித்தோ னிருடி

யொருவனடிசேர்வான்பொன்னோங்கல்சூழ்சம்பு
தருவினடியிற்றவமே புரிய

௧௦ கரத்திற்றவளக்கனியொன்றுவீழ
மரத்திற்கனிகருதுமற்றக் கரிக்கொத்த

மேனியுளதிந்தவெண்கனிதெய்வீகத்தா
லானதரற்கமுதமாமென்னத் தானெழுந்து

கைக்கொண்டடக்குங்கனியைக்கயிலையிற்போய்
நக்கனற்கனகளிப்பநன்றென்று முக்கணனை

வாங்கியருந்திவிதைமாமுனிக்குநல்கமுனி
தாங்கியருந்தத்தரிக்குமோ பூங்கொன்றை

தாரான்பவளவிதட்டங்கியதன்றேவுடலில்
வேராய்முடியிலவெளிதுரந்து சேராளி

௧௫ யேகபதங்காப்பவெண்ணுவலாயெழுந்து
சாகையொடுதழைப்பத்தாேங்கி யோகையுட

னின்றுபரவநிருத்தன்கருத்துடனே
யின்றுமுதற்சம்புமுனியிப்படிபோய் மன்ற

† நளினமுனிபூசித்தஞானபூமிக்கட
டெளிபிரமபுட்கரணிதீரத் தொளிர

விருப்பாயுன்னீழலிலேயாமுறைவோமென்ன
விருப்பாலவனவந்துவிட்டா னுருத்திரனா

ரற்பித்தவந்நெறியேசஞ்சமுனித்தடப்பால
பொற்புப்புறமுறையப்புகக்கதற்பின் வெற்பிடித்து

* ஞானபூமியென்றது முதலவன் றனது நாயகியாருக்கும் நந்தியெம்பெருமானுக்குஞ் சுத்தாத்வைதம் போதித்ததலமாகலின்.

† நளினமுனி பூசித்தது மலரோன் றானபடைத்த மகளைப்புணர்வதனாலழிந்த படைப்புத்தொழிலை மீட்டும் பெறுக்கொள்ளும்பொருட்டேயாம்.

நவ்வியகிலாண்டநாயகிஞானக்கேள்வி
யெவ்வழிநானெய்துமியலபென்னச செவ்வியாய
நீயும்போயஞானிலததிலெமையாசசியெனத
தாயும்போயந்ததலததெயதித தூய
வயன்றனைநோககிநாமர்சசிக்கவேதா
ளியனறசிவலிங்கமேதென்னப் பயின்றாளு
ரஙகமபிரியாவகிலாண்டநாயகியே
யெங்குஞ்சிவரூபமேயன்றே செஙகையிளு
லாததிமுடியோனைநீயாமென்றபூதலததில்
மூாததிகரித்தேத்தமுறைமையெனப் பூத்தடதது த
தண்டுறையினின்றுமையாடங்கோவைக்கஙகையுடன்
கணடபிடிபபாளபோற்கரபறபங கொணடு
திரட்டத்திரண்டசெழுநீர்த்திரளா
லருட்டிக்கவெண்ணுவலானேன் றிருக்கோவில்
சேர்ந்தருளிவீற்றிருக்குஞ்சிற்சம்புநாதரெனக்
கூர்ந்ததிருநாமஙகொணடபிரான் சார்ந்தவுமை
பேருவகைதோன்றப்பிரியாதநேகநாட்
சீருளமாபூசைசெய்ததற்பி னரின
றிருநாமநதானு * மமுதீசசுரமேயாகப்
பெருஞானமபோதிததபெமமா னிருதி
திசைதழைககப்பின்னிரக்கஞ்செய்யுமபெருமா
னிசைதவததாலெவ்விடையீண்டெனறுந தசையுடமை
வீஙகவரம்பெற்றவிருதசாசுரனுயிரை
வாஙகிய † வீரகத்தாலவானவாகோ னேஙகிததன
னுமத்தடஙகணடுநாளுநதொழப்பழைய
வாமததுறக்கம்வழஙகினேன் கா ௨௮

* அம்மையாா அமுதமெனனுஞ சலததிறைறிரடடியமைதத சிவ லிஙகமெழுஉந தலமமுததீசசுரம், இது திருவானைககாவேயாம

† வீரகததியெனபது வீரனைககொனறபழியினை

* சமிரமதனாற் † றணலிதவஞ்செய்ய
நிமிருமொளிகாட்டிநின்றோன — கமலபதி

புட்காணிகண்டுதவமபூணப்புலஞ்சோதி
மட்கலில்லாதவரநதநதோ — னுட்கு

0 மதிதனதுபொய்கைமருங்குதவஞ்செய்ய
வதிகவினைதீாததவமமா — னுததி

பருகியுமிழ் † முனிவன்பாரொக்கநிற்க
வருபொழுதுபூசிககவாழ்ந்தோன — பிரமகிரி

நின்றுகுறுமுனிகைநீங்கிநெடுங்காவேரி
யன்றுதொடஙகியலைககரத்தான — மன்றன

மலர்சிதறிவந்துதொழவானதிமுன்னான
பலநதியுமவாநதுபணிய — நிலைநின்று

காட்சிககதியருளிக்கண்டுகலந்தாடினாத
நீடசிததுயராறுதனிசசயமே — யாட்சிமலை

கண்ணுதற்குவிண்ணோர்தங்காவின்மலர்பறிக்க
நணணுதற்குப்போனகணநாதர்களி — லெண்ணு

மனப்புட்பவநதனுடன்மாலியவானருனு
மினப்புட்பமாருடியேந்திச — சினத்தினாற

றம்மைத்தான்சாபிததுச்சாாபானசம்புதலத்
தெம்மைப்பூசிததுய்மினெனறுவிட — வம்முறையே

*வெள்வாையிற்புட்பவந்தன்வெள்ளானையாயப்பிறநது
வள்ளலைவெணணாவல்வாய்வந்திறைஞசித — துளளிய

மாலியவானுமுருமாறிச்சிலந்தியாய்க
கோலியவெணணாவறகுடிகொணடு — நூலிழைத்து

நாதனசடைமுடிமேனுவற்சருகு,திரா
வேதநசெடபபநதரிடடுவரா — போதகங்கண

---

*சமிரமெனபதுபோரினை,இது சமீரமெனனுஞ்சொலலினவிகாரம

† தணலிதவஞசெயதது அகனிபகவான வாயுபகவானமனைவியைகக லநத பாதகததாற றனது தேசுகுறைய வதுமீணடு மடையவேணடியேயாம்.

0 சநதிரன பூசிததது தககன்சாபததாற்றேயந்த கலைவளரும் பொருட்டேயாம

† முனிவனபூசிததது முதலவனுககு மனறனடந்தஞானறுவடாது, தாழநது தெனறுவயா அம்முதலவனைபபடி அகததியன பொதியஞசெனறு பாாநோபெறசசெயவா ணிததலததுததவஞ்செயதனன

*வெள்வளா யெனனுமலை திருவானைககாவிறகு வடமேறபாகததி லுளளது

டங்கையாற்றள்ளிநீராட்டியருச்சித்தேகப்
பொங்காவாழுஞ்சிலந்திப்போதமுனிந் தங்கொளித்து
யானிட்டபந்தரிதுவோதவிர்ப்பதென
மானெட்டைவேழம்வருமளவுந் தானெட்டி
வெய்ததிருந்தஞ்சமெனமீன்மிடற்றிற்றண்டிலென்ப
பூததிருந்துபூட்கைபுகப்பெரு தாய்த்திறலின்
மிக்ககளிறலறிவீழச்சிலந்தியுமங்
கொக்கவிறக்கவுமைபாக ரக்கணமே
வாருமெனவெழுப்பிணாரணத்துக்கப்பொழுது
சேருஞ்சிவலோகச்சீரருளி யூரின்பேர்
யானைக்காவாக்கியருளச்சிலந்தியடி
யேனைக்காபின்புநாணிப்புவிக்குக் கோனாகி
நின்னடிமைசெய்யவருணீயெனமாலியவான்
சொன்னபடித்திலைவாய்த்தொல்லைமுடிச் சென்னி
யினியசுபதேவனெண்டொடித்தோடோய்ந்த
வனிதையரிற * புட்பவதிவாழ்த தனிமகவாய்ப்
போதுவித்துச்செங்கணனென்னும்பேர் பூண்பித்துச்
சோதிமணிமகுடஞ்சூட்டுவித்துக் காதலாயத்
தன்னூலிற்பந்தரிட்டதானத்திற்றனுவுக்குப்
பொன்னிறைகோயிற்புதிதமைப்பித் தின்னமொரு
† தந்திபுகாவாயிலுந்தக்கநவதீர்த்தமுங்கண்
டந்தணமடவாரனவரதஞ் சிந்தித்துச்
சேவிக்குமெல்லைத்திருச்சாலகநலமு
மாவித்தகநிருத்தமண்டபமு நாவற்
றருமுனிக்குச்சுற்றெல்லாந்தங்குகடவுட்
டிருவிருப்புநதேருந்தெருவு மரனுந

* கமலவதியென்றுகூறினார் கவிச்சக்கிரவர்த்தியாகிய கச்சியப்பமுனிவரர் தானருளிய திருவானைக்காப்புராணத்தில.

† கோச்செங்கணார் முன்சனனத்திற் சிலந்தியாயிருந்துழிச் சிவலிங்கப்பெருமானுக்குப் பந்தரிட்டநூலினைக் கலைத்துவிட்டது யானையாதலின அது இக்காலத்துநுழையாவண்ணம் வாயில்கட்டினார் பூர்வசென்மாந்தரவாசனையுடையவராகலின.

திருக்கோபுரநிரையுஞ்செய்யக்கண்டுய்ய
வருட்கோவிமுதலியளித்தோன் விருபஞ்
சாந்தசிலந்திமுடிசூட்டும்பெருமான்
பெருந்திருவெண்ணாவற்பெருமான் கருந்துளவோன
சேநுவிறலன்செய்தசிவபூசையிலகன்ற
பாதகத்தி * லொன்றுகாலபாருது போதுதலுந
தன்னையத்தாறபரதிட்டைசந்நிதியிற்செய திறைஞ்ச
வன்னனவினைதீர்த்தருளினே னிநகரின
மணணுஞ்சிவலிங்கமென்றஞ்சொராமற்
டணணுநதுசொன்மூவர்பாடகாகக கண்ணுற்று
றினறேதுமபாகங்கொண்டோனீடென்புபொனமலராய
நனறேதுஞானநகரினே னன்றரங்க
மஙகைக்களித்தமணியாரஙகாவையுமை
பஙகறகழகனபரிககவென நஙகை
பொருநதா திருபபதவும்பொன்னிநீராழத
திருநதாதொழுஙகழறகாற்சென்னி பரஞ்சுடரே
கொணடருளுகயெனப்பொற்கும்பநீரோடுவாக
கணடருளித்தாமணிநதகாரணத்தா லெண்டிசையோ
ராரமபூண்டாரென்றழைக்கும்பேர்பூண்டாவின
னாரம்பூணடாபனனகமபூணடா பாரிற
பணிவார்பிறப்பறுக்கும்பாதத்தான்வெணணீ
றணிவானனைத்துலகையாள்வா னிணையிலலான
றேவாகுலகக்கொழுந்தாதிப்பெருஞ்செல்வனியல
நாவலனறூதனடப்பெருமான் சேவுடையான
சோமநாதப்பெருமான்சோதிமறைதேடரிய
காமனைகங்கடிந்தகண்ணுதலான சேமமாந
திககாடையான்சந்த்ரசேகரன்றில்லையுளா
டிக்காட்டியபின்னிணையழக னகரு
மணியிலழகன்வசந்தனழக
னணியும்பணியிலழகன் றுணரான

* ஒன்றெனபது கும்பகன்னனைக்கொன்ற பாவத்தினை.

சரணழகுக்காகந் தழலாகப்பார்த்த
வரனழகுக்காருமொவ்வாதான் பரமன்

சிறக்குந் திருச்சாலகத்தொளிர்தேவேசன்
கறைக்கண்ட * னென்னுஞானைக்கன்று நிறக்கின்ற

மாபெருவெண்ணாவல்வடநாவலிற்கிளர்ந்த
கோபுரமேருநெடுங்குன்றேய்ப்பத் தீபவொளி

சீராலயமூர் † திருநீறிட்டான்மதிலு
மோரானதுங்கயிலையொப்பாகப் பேராது

தன்னிருபாற்பொன்கொழித்துத்தாவுங்கனதரங்கப்
பொன்னிநதிசம்புநதிபோலோங்கத் தன்னகரு

ழிப்பதியுமிந்நகருமிந்தரபதமுன்னான
வப்பதியுமச்சுரருமாமென்ன மெய்ப்புலவோர்

மேதகுவித்யாதரரினமிகவிளங்க
மாதரரம்பையரின்வாழ்வுபெறப் பாதவங்க

ளண்டாதருவிற்றோன்றவாடகப்பொற்றெய்வீக
மண்டலமொப்பானமழைநாடன் றிண்டிறலான்

மிக்கவிழவருவீதிவளநாடன்
செக்காவான்றிங்களணிசேகரத்தான் றக்கதிரு

வாதிரையான்மூலமறையத்தத்தானமகத்தா
ஞேந்தமெறிநாகைக்காரோணத்தான் சோதியான்

செச்சைதனிலாடியானகேதகையொன்றுவணியா
னச்சமனையனறுபுரட்டாசியான பிச்சை

யட்டாநதிட்டமாமுனிவராச்சிரமந்தோறும
படாநதிட்டமையற்பசியான கொடுங்கூற

றெடுக்கைச்சுவந்துபிறந்தேங்காததிகையான
கடிக்கைத்தொடைமாகழியான் பொடிச்சுதையான

---

* எனனுஞானைக கனறெனபது திருவானைககாவல சமபுநாயகருக
கு வேறொரு பெயா

† முதலவனே யோர திருவேடங்கொண டெழுநதருளி மதில
கட்டுந தொழிலாளிகட்குத திருநீறளிககவது அவரவாவேலைககேறபப
பொனனாயினமையின திருநீறிட்டான மதிலெனப்பட்டது.

வன்னிவளர்க்குஞ்சோமாசியான்வஞ்சகமே
பனனுமவர்நெஞ்சததற்பங்குனியா னன்னீராழ்

நீவணததவகுஞ்சிததிரையான்சிறுவனையாள்
காவணததிலேஙேனாவைகாசியான மூவரைவிட்

டப்புரததானாகருமளித்தவுயிரானியான்
மைப்புரத்தான்றஙகைவலததினன் செப்பரிய

வம்பரவம்பரத்தானமபொற்சிலைசிலையான்
பைம்பணியினனைபைம்பணியினன் செமபொறியின

கோவானகோவான்மேற்கொள்ளுமவையவததான
மாவாரணததானமாவாரணத்தான் காவாசன

கஙகையினன்கஙகையினன்காசியிலான்காசியிலான்
பைஙகடலசூழ்பாரிடத்தான்பாரிடததான் செஙகமல

வ.ததனகததிருக்காளத்தியான்கஙகுறைறதத
வததனகத திருக்காளத்தியா னெத்திசையும

வாவிசசுவேதவனததினன்றேடரிய
வாவிச்சுவேதவனததினன சேவைக

கரியகமலாலயததானுயவேதற்
கரியகமலாலயத்தான வருக

நவிலுமாணிக்கநகததானவலாரி
நவிலுமாணிக்கநகததான் பவளமணிப்

பண்ண திரேகாம்பரத்தினனந்தமறைப்
பணண திரேகாம்பரததின னணணி

நவமணியபஞ்சநதியானெனறேத்து
நவமணியபஞசநதியா னெவரையுமவந்

திககாமனசோதிச்சிராமலையானீன்றசெவ்வந்
திக்காமனசோதிச்சிராமலையான் மைக்கோல்

வாமததானீ லிவனததினனல்கியமெய்
வாமத்தானீலிவனத்தின ஞமததா

ஞலுகவியுடைவெணணுவலானேவலா
ஞலுகவியுடைவெணணுவலான் கோல

மருதவனததான்மழவைவயித்திய
னருணகிரிகோனமலன் மருகல
பறியல்கொறுக்கைபழனமிவற்று
ளுறையுநிருததனொருத்தன் மறைகொ
ளடவியகததிலவியுமவிளக்கை
முடுகுமெலிக்குமுடியுங குடையு
மவனியனைத்துமரசுமளித்த
சிவனிசைநெககுஞ்செவிய னவனடியின
மெய்க்கணிட்டவர்ச்சனைக்குமெத்தமெச்சிவிட்ணுவுக
கோர்,சககரதனதயுற்றளிததத்துவததன் மிககததவ
மெட்டிரட்டிமுப்பதிற்றிரட்டிபத்திரட்டிதப்பு
•சிட்டரெட்டுசிததசுத்தசிற்குணத்தான் வட்டமிட்ட
செஞ்சடையனசிங்ஃவுரஞ்சிந்துகொடுஞ்சிம்புளினன்
பஞ்சமுகன்சஙகணியும்பைங்குழையன செஞ்சரணங
குஞ்சிதவங்கங்கொள்மினனகொம்புவிரும்புநதிறல்கண
டஞ்சனடந்தநதுவிளங்கம்பலவ னெஞ்சிலுறை
நாதன்பிறந்துழலுநாயேனையாட்கொண்ட
பாதனபரமன்பராசோதி யாதவன்சூ
ழாசைகொண்டசமபுவின்கீழாறெணசதுரியுகம்
பூசைகொணடசமபுவிறற்பூதேசன தேசு
குலவுமிடபககொடியேறறிவீதி
யுலவுதிருநாளதனிலோர்நாள தலவலைய

## பவனி.

மூமிருடீரமுறைசெய்வான்மூரிதமே
ருடுபெருதியுதையமே ழாடகக்காற
செசசைப்பவளசசெழுந்தரளமாணிகக
வசசிரபரவாளசிதரமணடபதநுப் பசசை
மயிலைவடிவுடையமஙகையையினசொற
குயிலையணைந்தகுலாவுந துயிலை

மணத்தகடம்பன்கொடியுமாயோன்கைச்சங்கு
முணர்த்தவுணர்ந்தமளியோவித தணப்பிலாக்

கனனிமுகங்கருகக்கங்கையுடல்வெளுப்பப்
பொனனிதனையழைத்துப்புலவியபின முன்னிகழ்ந்த

போதகமேனமையாற்போகத்தாலிவ்வூரில்
வேதியர்கள்பூசிக்கவேகொண்டு சீதப

பனிமணடலமதிலைப்பைம்பொற்பதியிற்
றனிமண்டபத்திற்றவிசி னினிதிருந்து

வேதமுழுவாவிளம்பியவித்தார
நாதமுங்கேட்டுநடங்கண்டு சோதிப

புகையழலிற்றந்தபுலிபட்டிருக்கத்
தகையகலைமருங்கிற்சாத்திப் புகுவா

யரவமணிக்கச்சையதன்மேலிசைத்துச்
சரணபரிபுரமுஞ்சாத்திக் கரதலத்திற

* காகோதரகங்கணங்கவினக்காண்டகுதோள
மாகோமளவலையமாட்சித்தர நாகேச

னன்றளித்தபேராரமாசத்தழகெறிப்ப
மின்றளிர்த்தபொற்றோடுவீறுபெறத் துன்றிய

நட்சத்திரமாலைநவசந்த்ரமாலையுட
னட்சத்திரமாலையாங்கிலங்க வட்சத்

தலத்துத்திருமேனித்தாவடங்கடாழ
மலர்கொத்திதழித்தாரவாய்ப்ப மலர்கருவளைத்

தாமங்கமழச்சடைநீரருவிநிரை
யாமெனமுன்னூலுமாங்கிலங்கச் சோமக

கிரணபிடேகங்கிளரக்கரமான
தருணமிருகமதந்தாவப் பரிநாமச

செககர்விசும்பிற்செறிந்தசிறுகாரென்னத்
தககசுருஞ்சட்டைசாத்தியபின் சொககத்

தருணியசெங்கட்சகோரம்படுப்பா
னுருவிலியோடங்கிரதியொப்பப பெருவளையின

---

* காகோதரமெனபது பாமபினை.

12191



மஙகைமுயக்கததுமாமுலைமேற்கததூரி
பஙகமடஙகப்படிந்ததென்னத் தங்கருணை
யனபருளததிலிருள்வாஙகியன்புசெய்யாத
வன்பருளததில்விடம்வைததெனத் தன்கண்கள
மூனறினுககுமாறுதமுடிருளைக்கேடகற்றத்
தானறிததுவைததகைமையெனத் தோன்றச
சிவநததிருமார்பிற்றிருச்சாந்துசாத்திக்
கவின்றரசவாசஙகமழப் பவஙகொள
௧௩௫ தணிமாலையனுர்தலைமாலைபொற்கிண்
கிணிமாலைதமமிற்கெழுமப் பணியி
னிழலபூததவேணியானெற்றிககண்ணின்ற
அழலபூததநீறுதயஙக வெழிலபூதத
செவ்விக்கமலத்திருமுகமுஞ்சோதிதரக்
கைவைததவீரமழுககாட்சிதர வெவவழகுக
குணணுமெனபருளததிற்றியானப்போற்
கணணடிகாட்டுவதுஙகணடருளி வெண்ணவல
மாமுனியுநதாமும்வருவநெனததணடாளத
தாமமணிககவிகைதாணிழறறச சேமத
௧௪௦ திருவாடுதணடிற்சிறநதேறிததேவா
மருவாடகவாயிலவநது சுரலோக
வானெனனப்பூலோகமஙகைதவபபேறு
தானெனனமேருவெனனததாருவெனன ஞானக
கடறகானசோஙகெனனககாடடுகதியெனனத
தடககாசினிதவபபேறெனன விடைககொடிநின
றாடுநவரதநவலஙகாரவாடகததே
றூடுகவரியுடனேறி நீடுதிரு
கொறறககுடைசசுககஙகோலநிலாடபரததரினகீழ
நறறுபபணிசதரநனகமைய முறறுக

MAHAMAHODADHYAYA

மந்திரவட்டத்துமாயன்றன்வநதனைபோற்
சந்திரவட்டங்கடான்றயங்கச சிந்துரமேற்

பிச்சமநேகம்பிறங்கப்பெருங்கடல்சூழ்
வைச்சதரங்கவகைமான மெச்சுவா

ராசிபுடைசூழவாலாலவட்டமிட
வாசமுறுமுத்தினடப்பைவரப் பாசமு

மங்குசமுங்கோடுங்கொண்டைந்துகரத்தண்ணலார்
வெங்கணடலாகுமீதேறச் செஙகண்மால்

கந்தன்விரிஞ்சன்ககவாகனத்தேற
விந்திரன்சாத்தனிபததேறச் சநதிரனுரு

சஙகநிதிககோவுந்தரளவிமானத்தேறச்
செங்கதிாகளாறிரண்டுந்தேரேறப் புஙகவஙக

மேறுமுருத்திராகளேறவேதோகையன்னத
தேறவசுக்கனௌரிககடவுள் மாறி

யொரு * மையிலேற † வொலிகலையேற
வெருமையிலேறவியமன் வருணன

சுறவேறககோளரியிற்றுாககையினிதேற
வெறிசூலவைரவனுயேறத திறலபடைதத

காளிகடியேறக்கநதிருவருஞசுரரு
மூளுமெழிலிமுதுகேற நீளருகா

சேரக்கழுவேறத † தெனமதுரையேறிஞே
ஞரசசிவிகையதிலேறப பூரிககப்

பாடும் ‡ புலவர்பரியேறப்பாணியிறறா
ஞேடுதிறம்பா ‡ வுரைததோனுங கூடலிலே

சம்புபரியழைத்த † தக்கோனுந்தணடேறச்
செமபொற்றடமவுலிச்செஙகணுன் வெமபுரவி

---

*மையெனபது ஆடடுககடாவினை. †ஒலியெனபது வாயுபகவானை
† ஆளுடைய பிளளையாா ‡ ஆளுனுடையநமபி, ‡ ஆளுடையவரசு.
† ஆளுடையவடிமை.

மேவிவரமீனவரும்வில்லவருமெயத்தவத்தோா
யாவருமேத்தியிறைஞ்சிவரப் பூவி
லெதிரின்றியநாற்பத்தெண்ணுயிரரும்
பதினெண்மடததிற்பயிலு முதலிகளும
வேழஞ்செய்பூசைபுரிவேதக்கவுசிகருஞ்
சோழன்கொணர்ந்தநதிச்சோழியரு மாழிசூழ்
தந்த்ரபெரியசரணமறையோரு
மந்த்ரசிவமாமறையோரு மெளதைமுடிக
கங்காசலமரபில்வந்துசிவகாரியததைத
தஙகாதலாற்புரியுந்தக்கோரும் பைஙகாத
லாரியபட்டருமனபாலகஙகுழைநது
சீரியப்பாட்டோதுந்திருப்பெயரு நேரிலான
சுநதரனையாண்டநாட்டொல்லாவணவோலை
வநதவையில்வாசிக்குமநதரிகளு மிநதுநுதற
கன்னலுமைகொவ்வையிதழ்காரளகபாரதனத
தன்னநடைததேவரடியாருங கனனிக
குமாரராஙகோயிற்கைககோளககுழாமு
முமாமதியாஙகணகாணியோருஞ் சமுகப
படை * வயிராவிப்படையும்பரனரு
ளடையுமகமபடியாருங கடலுலகத
துளளதபோதனருமுட்சமயததோாயாருந்
தெளளியபாவலருஞ்செனனியரும வெளளமென
வெஙகுநதிரணவெரவேறறுககொடியீண்டச
சஙகுஙகுழலுநதடமுரசும வஙகியமு
மததளமுமபேரிகையுமணமுழவும்விணமுழவு
மெததிசையுமொததிசைப்பயாழினமுரல மெதது
சகமேவுதேவர்கடம்பிரான்வந்தான
மகமேருவில்வளைததான்வநதான பகவிப

* வயிரெனபது ஊதுகொமபினை.

படியிடந்துமாலறியாப்பாதத்தான்வந்தான்
வடிவழகுககாருமொவ்வான்வந்தான் விடுநாற்
சிலந்திமுடிசூட்டுஞ்சிவன்வந்தான்செவ்வி
மலாநதமுகமுடையான்வநதான் றலமளநத
தாளுயாக்கும்புள்ளூா்தித்தம்பிரான்வந்தானென
ருளுமொறறைமெயக்காளமார்ப்பெடுப்பக் கூளிகுறள்

கஎ௫ சுற்றுஙகவர்ந்துவரத்துள்ளுமகரத்துவசன்
வெற்றிசசிலைகசொடிசேவித்துவரப் பொற்ருெடியாா
தோரணவீதிதனிற்ருேன்றினார்தோன்றுதலு
மாரணநாட்டிலரம்பையரு நாரணனா
வைகுண்டலோகத்துமங்கையரும்வாகனமாம் [ன்
பெய்கொண்டலோனுலகிற்பெண்படையு மொய்கதிரி
மண்டலத்துககன்னியருமாநாகமங்கையரு
மெணடிசைவெற்பிலுள்ளவேழையருங் கணடுருகி
மானிடமங்கையராய்மண்டபத்துங்கோபுரத்து
மீனுடையவிண்டோயவிடுதளதது மேனைக

க௮௰ கடையினுமுன்றிலினுங்கற்புரிசைசூழ
விடையினும்வீதியினுமெய்தி மடவீா
விருதேத்தவேள்பரவும்வெணணாவலீசா
வருதோப்பவனிதொழவாரீ ரெருதேறித
துமபைசசடைப்பிறையைச்சூழ்செககர்வான்போலுரு
செமபொற்றிருவாசிகைபபாரீர் வெம்பணததி
லஙகனுலகெல்லாமடக்குமராவிவாககுக
கஙகணமானகவின்பாரீர் தஙகைககு
வாய்ததமணவாளனொன்றறிந்துமைததுனனா
சாத்தியவஙகண்மணித்தார்பாரீர் நேத்திரஙகண்

க௮௫ மூன்றினிடையூடேமுயங்குமிருண்மாறிப்போய்த
தோன்றும்புருவததுணைபாரீா வான்றரளத

தோடிருந்துகாதுறைவாயாழிசைக்கோர்சோதிகரத
தூடிருநது தாவுமுழைபாரீர் தாடொழுது

சேகரததாரானார்தஞசென்மவினைககோடீர
மாகரததிலேநதுமழுப்பாரீர பாகத்தி

னன்றாய்க்குடியிருந்துநாதனையுங்கங்கையையு
மொன்றாகவிட்டவுமைபாரீர நின்றேததுந [குந

தையலாரமேனியெல்லாந தனணிறமாய்த தோற்றுவிக
துய்யபூங்கொன்றைத்தொடைபாரீர பையவெனச

செல்வார்தங்காதலெல்லாந்தென்னானைககாவார்க்குச்
சொல்வாரெமக்கருளாய்தோளென்பார விலவாங்கி

யெண்கொண்டபூங்கணைவேளெய்தவடுதேவரீர்
கண்கொண்டுபாரீர்கடிதென்பா ரொண்கண்கள்

செங்காலிற்சாதித்திருந்துமாலாமெமக்குச்
சங்காழிதாரீர்தனித்தென்பார வெஙகாதல்

பேதையர்மாட்டில்லையோபின்னிரக்கஞ்செய்வாரொன்
றேதுதிருநாமமுமக்கேதென்பார தாதிதழித்

தேமாலைமார்பீர்செழுநீர்த்திரளாகில்
யாமாடவொட்டாததென்னென்பார் கோமானே

வெங்கைவேழஞ்செய்தபூசைபோல்வெவ்வினையோங்
கொஙகைவேழஞ்செய்யக்கொளளென்பா ரெஙகள

செழுநீர்த்திரளாந்திருமேனியெல்லாங்
கழுநீரததிரளாககககாணபா ரழுநீ

கடலிற்றனிமையினாகத்தைக்காண்பாரபூ
மடலிற்கைவைப்பாரமகிழ்வார் வடிவழக

ருற்றாரெமக்கென்றுருவெளியிலோடிப்போய
முற்றுமுலையினமுயஙகுவார சொற்று

னயாவாரகலைநாணகல்வாரறிவு
பெயாவாரவரிலொருபேதை கயிலைக

## * பேதை.

கடவுளபகவன்களவுறூ றன்னை
யடிவரவுதிட்டுமேலேகம் புடவிபுகழ்
சீரானைககாவானறிருககொஞசலப்புரத்துப்
பேரானையிைப்பிடிக்குருளை சூராலங
காட்டிற்பயினடததோன்கச்சியேகாம்பரத்திற்
கோட்டிற்பயிலாககுயிற்பிள்ளை மூட்டமரின்
மண்டலகைச்சேனையோன்மாணிககமாமலைசூழ்
கொண்டலிடிககாடாககுழாமஞ்ஞை முண்டகக்கண
ணென்ஞனைக்கன்ருரிமையத்தாரத்தலதது
மன்ஞதுலவுவனக்கன்று தன்னே
ரடியார்க்கெளியானனமேவுபொய்கைப்
படியாக்களியன்னப்பார்ப்பு விடையான்
சடையிலடங்குஞ்சலம்போற்றடத்து
ணிடையிலடஙகுமிறைபோல் வடதருவின்
விதிலடங்கும்விதையைப்போல்மேகசரீ
ரதிலடங்குமசனிபோ லத்தி
யுழையிலடங்கியவோஙகல்போலூதுங்
கழையிலடஙகுஙகனலபோல் விழைபொய்கைத்
தோயததடஙகுநதுணைததாமரைமுகைபோற்
காயததடஙகுஙகனதனததா டாயிற்
சிறந்தபிரானல்லாததெய்வங்களபோலே
யிறநதுபிறககுமெயிற்ரு ணறுங்கொன்றை
நீரஙகொள்வேணியாபைஞ்ஞீலிவனததிலதி
காரஙகொள்ளேமனபோறகணணிறு டேரிற்
பருதியகன்றகலாப்பகுவததிறகங்குற்
குருதியனையகுழலாள கருதிற்

* பேதைககுப பிராயமைநதுமுத லேழளவுமாம்.

12791


பெரியவடநூற்பிரகிருதர்பாடைக்
குரியகுதலையுரைப்பா ளெரிகின்ற
சுந்தாமணிவிளக்கைநாடுங்குறளிபோற்
செந்தாமரையென்னச்சிந்திப்பாள் முந்துகதிர்
துனறிசூரக்கடவுடரேத்தெழுந்தோறுங்
குனறிச்சூடென்றளகக்குந்துவா ளென்று
* மகததிலெழுமபிறையைவாவெனறுரைப்பா
ளகததிழகைகணடயாவாள மிகுதத
செழுஙகமுகின்செந்தாதைததீயெனறுவணடற்
குழநதையைககொணடேககுறிப்பாண முழஙகு
மொருவரிதறகுளுளரெனறுமெனறேற
கருவியுடைககுஙகருததா ணிமைமகுட
மாடமணிமுகடடிறகாரகணடவண்ணமயி
லாடவளைககைவிரிததாடுவாள கூடலவாய்த
தொல்லானைக்காவுடையானசூழ்ந்தவிளையாடலபோற்
கல்லானைமுன்னஙகருமபளிபபாண முலலைக
கொடிககுயினறபநதறனைககோடடுககுனிசி
யிடைபபுளினவரிசியுலையேறறி யடாதரளச
சிறறிலகததிற்சிறுசோறமைததருநத
சுற்றிலவிருந்தழைப்பாளசோதிமணி முறறத்து
வநதனளவவளவில்வாயததசிறுதொண்டாபான
முநதவிருநதுணடமூாததியான றநதிவனது
துளளான்மண்காககைககுரியானிலுமவலியா
னள்ளாவிடமுனனருநதினான் வெள்ளானை
பூசிககவீடளிததுப்புனசிலநதிசூட்டுதற்கு
மாசிதரமெளலிவழஙகினோன தேசுதிகழ்
நீததிரளெஙகள்செழுநீததிரடேவா
பூததிரள்சிநதிப்புடைசூழ வேதநமறை

*மகமெனபது ஆகாயததினை இது மாகமெனபதின குறுககலவிகாரம

நாற்றுரகததேற்றதலனாலத்துநாணுகித
தோற்றுரகததேற்றுததுவசததது வேற்றுச்
சுடருருளைததேரின்மேறறேனறுதலுமீன்றோ
வடமணியல்குறறேரில்வந்தா னுடனே
தொழுதுதொழுதுபூசிததுததூவிமடமாதா
நிழற்குநிழலதானுகநின்று டழறகரததோன்
கொன்றைச்சடாமுடிமேற்கொக்கிறகுநககறுகுங
கனறுகதிரவாளரவுங்கச்சபமுஞ சென்றசென்ற
வெலலாவுகாந்தத்துமீசற்கொருதிவசஞ்
செல்லாதுகாட்டுஞ்சிறுபிறையு நலலிசையின
வாணாபடைவீடுமுசசுடரினமணடலமுங
காணரியநீலமணிககநதரமு மாணிகக
கேயூரவாகுஙகிரிதனையுமானுமொரு
மாயூரநீஙகாதவாமமுஞ சேயவொளிந
தெககணபாகமுஞ்செஙகைததமருகமு
மக்கணியுமகிளியுமாகமு மொககச
செழியாவிருமென்றுசேர்க்குமடியாாககு
வழியானவுநதிமவெ முழுவை
யதளுடையுமம்பலததுளாடிச்சிவந்த
சததளமுங்கண்டுருகிததானே புதிய
விவனாவிருந்தழைமினென்றுளதுகேட்
டுவகைமிகுந்தன்னைமாருன்போற றவமுனிவா
மாதரிடவறிந்தாரிலலேயோமாலகொண்ட
வாதரவானீயமைத்தவாரமுத † மேதினிதா
னன்றேவதுபரமற்காகாதவர் * விடைக்கா
மென்றேதவேதிவர்க்காமென்றுளை நின்றோர்பாாத
தாலாலமுண்டுகளித்தாரமுதமுண்டபெதி
ஞலாநாளுள்ளுநவமதியின் மேலான

* † மேதினிவிடைக்கா மெனறது மணணுண்டல் மாலுககுரிய தெனபதைக குறிபபிததது.

வாதிப்பெருஞ்செல்வாக்கனனமேயேதரித்து
பேதைப்பருவம்போய்ப்பேரணங்காம போதழைத்து
வேண்டியவின்பவிருந்திடுநீயென்றளவிற
காணடகுதேர்வீதிகடந்ததா லாண்டவறகிங்
கூட்டநினைப்பாளுமைபோலுமென்றுவநது
வாட்டநினையாமதனசென்றான கூட்டகதது
வல்லியொஙகட்குமானேவிருந்திடென
வில்லிடைகொண்டேகினாளீண்டொருததி யலலி

## *பெதும்பை.

யுறஙகுகணைவெளவறகொருநாட்கொருநாட்
பிறஙகுகருமபனாள்பெதுமபை நிறைந்தபொருள
யிததைபோதாதெனினுமவேணூலிலேசிறிது
ததைதபோற்கற்றுத்தனிததுணைப்பாண் மெதத
நிரம்பாசசெயலாளெனகிழச்சியானமுககண
ணரன்பாததமபுயப்போதனாறு டிருந்தவிவ
ளாலிஙகனமேயமையுமெனததேவா
மாலிஙகுறலாவணப்பினாண் மேலனபு
மையொததகண்டனபால்வையாதவாமனம்போல்
மெய்யொப்பனைதானவிரும்புவாண மைய
றருசுரதமுமபிறவுநதானவளாததவேட்டுகே
குருகுகளிறகணடறிநதுகொளவா ளராறா
சகஙகாயுஙகூததுச் 0 சமைநதுதிரைநின்று
முகஙகாட்டுமென்னமுலையா ளகங்கைப்
பலியுகநததமபிரானபததியர்போலின்பங
கலியுகந்தட்டாதகணாள் †சிலைமகரங
காட்டுதுலைமீனலவனகன்னியிலுண்டானமழை
கூட்டரவிறகூட்டுமஙகுழலினாள் வீட்டதேத

---

* பெதுமபைககுப பிராயமெட்டுமுதற பதினொனறளவுமாம.

0 சமைநதெதிரே யெனவும பாடம

† தனுசு, மகரம, துலாம் மீனம, கடகம், கனனி இவை காமுகரா சிகள, இககாலததது மேகஙகள கறுமையடைநது காலவாஙகிநிறகும.

சீதளக்காவிற்சிறுதென்றலூடாடு
மாதவிநீழலிலேவந்திருந்து தூதியரும்

பாங்கியருமன்னையரும்பார்க்கவொருபாவையுடன
யாஙகழஙகாடுதுமென்றமைநது வாஙகிஞெ

ளொன்பான்மணியதனிலோரேழ்மணிதிரட்டி
யின்பானகோளேழெனததிகழத தன்பாணிப்

பல்லவததுளெல்லாம்பவளமாணிககமொழிந
தில்லையெனவிளஙகவேற்றெறிநது தொலலோன

படாகயிலேவெற்பெடுததபததிருதோளவீர
னுடலசரியவூன்றியதாளொனறு மடலவிழ்பூந

தேஙகாவிசூழுந்திருவானைககாவிலுறை
யோஙகாரமூாததியுருவிரணடு மோஙகற

கொடிககன்புகொணடபிரானகோலமூனருககி
முடிக்குநதிருககருமமூனறு மடைககலமென

றேததெடுககுமெம்மையெழுபிறப்பின்வீழாமற
காததெடுககுநாதனகரநானகும் பூததொடுக்குந

தாாகாககுஞ்செஞ்சடையான் சஙகரிககுநாள்வரைமால்
பாரகாக்கததநதபடையைநதும் போர்காடடுந

திண்பிஞைகப்படையானசேவடிசேரததவஞ்செய்
பணபிஞாவெல்லுமபகையாறு மொண்பார

திருந்துவிடங்கொனததேற்றும்பாோதத
விருநதவிடங்கடானேழு மருந்தனையாள

பாடிவிளையாடும்பருவததுருவத்துக்
கூடிவிளையாடுமலாகொமபிஞெ

வலியைககருதாமல்மாதவததோாவிட்ட
புலியைக்கலையாப்புனைந்தோ னுலகனைத்து

மாண்டவன்காகோதரவாபரணனனைநதத
தாண்டவன்சிங்தூரச்சரணததா னீணடவனுக

கெட்டாதநீளத்தானெள்ளெண்ணெய்போலுடலி
னுட்டானுயிராயுறைகின்றான　　　　புடடாவு

விணடடவுகோடரதநுவெண்ணாவல்வாய்சசிலநதி
கண்டநிழலிலுறைகங்காள　　　　னண்ட

ரடிபரவுமாதிபபெருஞ்செலவனததன்
வடிவழகுககாருமொவவாதான்　　　　சுடருருளைச

செமபொறறிருததோமேற்றோனறுதலுஞ்சேயிழையு
மம்பொறகழஙகாடலாஙகொழிநது　　　　தமபிரான்

சேருநதிருவீதிசெனறாடிரண்மாதர்
யாருமிறைஞ்சவிறைஞ்சினா　　　　டாருந்

திரண்டசதுரப்புயமுஞ்செம்முகமுங்கணடா
ளிரண்டுவிழிககடங்காதென்றானை　　　　மருணடுதொழு

தாதரித்துததாயைப்பார்ததன்னைமீதென்னையிவர்
மாதரிததிண்டேரினவைமமினென　　　　நாதனார்

தாமேறுநதேரிற்சதுமுகவற்கல்லாது
யாமேறப்போதாதெளிதனறே　　　　யாமெலவாந

தீண்டற்கரியதுகாண்டெய்வத்திரட்சிகாண
காணடற்குவாய்ததுசஙகற்பஙகா　　　　ணாண்டவாகைத

தீயுளதுகாணசடையிற்செஙகணரவுகாண
பாயுமெருதுளகாணபைநதொடியே　　　　நீயடாந

தேகததொழாயென்றாளென்சொனனீர்தேறிலிவர்
பாகததிருபபாளைப்பாருமென　　　　மோகங

குடிபுகுநததெனறெணணிககோதையாகொணடாடி
வடிவுடையமஙகைககுமாறா　　　　யடியிடடா

ளாகாவெனநகைக்குமவ்வளவிலாடகததே
ரேகாவயலவீதியெயதிததான்　　　　மாகாம

னிப்பாவையையெயயவெண்ணாவனெணணாகி
யொப்பாரிலாதாருடனசென்றான　　　　தப்பியே

MAHAMAHOPADHYAYA

நிற்கின்றமானைநிறைவளையாராம்பூனை
யிறகொண்டுசென்றாபினீண்டொருத்தி பொறகுன்

## * மங்கை.

றனசம்புநாதனயன்மேவுபொய்கை
வனசம்பொருமங்கைமங்கை தனதிடப்

பங்குமைக்கீநதோன்பதியைததனதாககுங
குங்குமககொஙகையாளகொஙகையாள பைஙகயிலை

யாதியானகாவேரியாறறிலறலபோலு
மோதியாளகாமகலையோதியாள் பாதியாம்

பெண்ணிணுதிப்பெருஞ்செலவனுனைக்காக
கண்ணிளுளவேலனையகணணிணு ணைங்ஙணியசீாத

தந்தியராமததனர்தாமச்சடாடவியி
லுந்தியானச்சுழிபோலுநதியா ளெந்தை

யிணஙகியவெற்பின்கீழெதிர்நததோர்காலன்
வணஙகியரோமவலியா ளணஙகனைய

தன்பருவவல்லியருநதானுமணிச்சாளரத்துப்
பொனபுனையுமாடரஙகிற்புககிருநது மின்பநது

மினனிடைதாஙகுவனவித்தாரமெதநுவன
மனணியமுதநுநவரததினவாய தனனிரணடு

கொஙகையுடனமாறுகொணடகோட்டுப்பிழைககவறறை
யஙகையிலுலவாஙகியறைநதெறிநது சஙகரனைச

சொலலாமொழுபிறப்புஞசுறறிததிரிநததெனை
வெலலாவவையவததுளையதுவிதது நிலலா

தெழுவிததுமவெளளியிலககினிகால்வீழ்
பொழுதொககநிற்குமயிலபோனறுஞ் செழுமை

திருநதியகொம்பிற்செறிகனிகருப்புட்கள்
பொருநதியெழுநதகல்வபோனறுஞ சுரும்பு

---

* மஙகைககுப பிராயம் பனனிரண்டுமுதற பதினமூனறளவுமாம.

மருமுளரிககாட்டிணங்குமாபோன்றுமாரன்
பொருபுரிந்துசூழ்கதண்டுபோன்று    மொருதன்

மிருவினைகள்கண்டோர்விழிகுலமுநெஞ்சும்
புகுவனபோவனபோன்றும்    திகழ்தரவே

நின்றுடிநாளேநினைவளேயார்தாம்பூணா
யென்றுகமபுல்லியிலஙகிழையா    யுன்றெழிலை

யாமோகொண்டாடுவோமானைக்காவீசனா
தாமேயறியததகுமென்ன    வாமே

யவரறிவாராகிலவரேயெனககா
னவாவதுவைக்கென்றுநவின்றாள்    சிவரூபங

காண்டற்குவேண்டிக்கவின்றிருத்திக்காரிகையா
ரீணடிப்புடைசூழ்வினின்று    நீணட

கனகநிலைரதனக்கதவுகடைநீக்கி
யினியதெருமருவுமெல்லை    புனிதன

திருந்துசெழுநீததிரளான்றெய்வீகப
பெருந்திருவெண்ணுவறபெருமா    னருங்கொலவி

நேரிமலையுடையானீலநெடுஙகாலனுடற
சோரிமுடைநாறுஞ்சூலததான்    பேரிமைய

மாதகலாதுறையும்வாமபாகததினன்
சீதகலாசசநதரசேகரததான்    போதன

சுரபேதவேதஷட்துரகத்தேர்தூண்டி
வரவேபவனிவரலும    புரிகுழலாள

செனறுடிவேதச்செழுநீர்த திரள்வந்தா
னெனறுடிப்பாடியிறைஞ்சினாள்    கொன்றை

யலங்கலழகரடியேறகிரஙகி
யிலங்குபுயமளித்தாலென்றுங    கலங்கினேன்

யென்னையிடபபாகத திருததினலியானவள்போ
லுனனையிரநதுழலவொட்டேனே    கன்னியைப்போல்

மேதகுமுப்பத்திரண்டறத்தைவீசியுனக
கோதககடனஞ்சையூட்டேனே கீதவிதரு
சீராகப்பாடித்திருக்கூத்திலுந்துணையாய்ப்
பேராதுநிற்கப்பெறுவேனே வாராயென்
றோதுமளவிலுமையாள்முகநோக்கி
யாதிமுறுவலரும்பினான் மாதை
யெவருநகைததாரிரதிபதியேதா
னவிருமணிததேர்கணடதப்பா லிவளொருத்தி

## * மடந்தை.

யநாளுததிதருமாரமுதுககாரமுதாம
பொன்னுபரணத்தின்பூணார மனனுள
விழிவேலைத்தந்தானைவிலவேலைமெய்யே
வழிவேலையாளுமடநதை யெழில்மேனிக
கன்றன்றணிநதகலநதோறுயாதுலருக்
கென்றுமகொடுக்குமியலபானை நின்றொருநாள்
கீதம்விரவியொருததிகிளாகீாததி
யோதவமைநதெதிரநின்றோதிமமே மாதாக
கரசேமணியேயமுதேயணங்கன
சிரசேகரமேதிருவே கருணைகரு
நீயேயுமையென்றுணேரிழையுநானுமையேற்
றாயோனைசசேரேன்கொல்லெ ன்று ளாயவருட்
கஙகைநீயென்றுளவளாகிறகண் துதனமேற
றஙகுவனேயென்றுசாற்றினாள் கொஙகை
பொருப்போவென்றுளபபொருபபாகிலீமத
திருப்போனிருககுஙகாணென்று ளிருப்புருவம
பொற்றனுவோவென்றுளதாகிற்புராரிகரம்
பறறிவளையாதோபகரென்று ணெறறி

* மடநதையின பிராயம பதினன்குமுதற பததொனபதளவுமாம.

பிறையோவென்றேதிருள்பெய்வளையும்போ
திறையோன்முடிககுமேயென்றா    ணறைமலர்க்கண்

மானேவிடமோவெனவுரைததாள்மன்றாடி
யானேன்றறிககுமேயாங்கென்றா    டானது

மாராமல்தன்னையறிநதுசிவனுகத்துக்
கோராதவளோநீயென்றேத்தப்    பேராசை

வல்லியும்வந்துமணிப்பூடணமெறிந்து
புல்லிவிடவவளும்போநதோறுஞ்    சொல்லுதலுந்

தன்காதல்தானேதனக்குத்துணையாக
மின்காமனம்பினுடைவெம்பினு    ணன்காவிப

பாயலதனைப்பணியென்றாள்பாவைநோய்
தாயரறிநதணுகிததையலே    நீயஞ்ச

வேணுமோவுன்னைவினவியேவெண்ணுவற்
றாணுமோகஙகொண்டுதானுளைக    காண

வெழுந்தருள்வனின்வாசலென்றுமதவேளு
மழுநதணசமீரனுவோனுஞ்    செழுஞ்சடையிற்

றாங்கியசந்திரனுந்தாமூர்மழவிடையு
மீங்குவரககாட்டினுனொனறேதத    வாங்கவளுங

கங்குற்கடனீநதிககாலையவன்வருமென
றங்கததைப்பூணலலங்கரிததுத    தொங்க

லளகமுடிததிடையிலாடையிறுக்கி
வளைகடிருததிவிழிமையிட்    டொளிர்திலக

நெற்றிகசெழுதிநெறிமேல்விழிவைத்து
மற்றொப்பிலானமேனமனமவைததுச    முற்றாத்

தனததியர்சூழவெதிர்கொண்டுநின்றா
ளனததினூருந்தேரினனும்    தனததினனு

மாலுமகவானுமவந்திப்பததுந்துமியெப்
பாலுமதிரபபவனிவர    வாலிபத்தா

ளன்னையர்சொன்னதறுதியெனவியந்தாள்
கைந்நிறைபொன்னலததிகாட்டினள்      சன்னிதிநின்
றெண்ணார்புரமெரித்தவெண்ணனைக்காவாரே
வெண்ணாவனீங்காவிமலரே      தண்ணறுந்தா
செனனியுடன்முற்றுஞ்செழுநீர்த்திரளாரே
பொனனிவருமாரம்பூண்டாரே      யென்னிதயத
தம்மைநினைந்தளவேயுண்டிகடுவாயினே
னம்மதிப்போன்மெய்பாதியாயினேன்      வெம்மதன
வேளும்பகையாகிவிட்டான்விட்டேனுடை
நாளுநதுஞ்சாதநலம்பெற்றே      னளநீ
ரென்னைநினைந்தெய்திநலேதோவுமக்கரிதென்
றன்னமுளப்பாடறிவிப்பப்      பின்னிரககஞ்
செய்திலன்வேள்பூசநீர்த்திலன்செங்கணருட்
பெய்திலனதிப்பெருஞ்செல்வன்      மொய்தன்
றொடைவழங்கினனேபொற்றோளளித்தானேமின
கொடைவிரும்பிதனசுவனைகொண்டான கடைவழிபோய
திண்டேருந்தானுந்தெருவகன்றான்சீராக
வண்டேரிதழியாண்மற்றொருத்தி      யண்டா

---

## *அரிவை.

---

விபரஞ்செறிமடவாாவேறறுருவிற்றேன்று
மபரஞ்சியன்னளரிவை      தபனன்சா
பொற்றரளத்தோடாகிப்பொங்குபூணாரத்தி
னுற்றவொளியாயுடன்மேவ      நற்றுளவோ
னேதியில்வண்டாயுறையவொளிரோதிமமா
யாதியயனாடிதொடரச்      சோதி
மயிலாயவலாரிமகிழநடங்சாட்டப்
பயிலவாயுச்சாமரையிற்பாயத்      துயிலா

---

*அரிவையினபருவமிருபதுமுதலிருபததைந்தளவுமாம.

வளகாபுரேசனடிச்சிலம்பாய்நிற்ப
விளகாதமாறநிடுவாள்   கிளாகாவிற

௩௫0 பத்துமரமததனையோபட்டமரமுஙகிரியுஞ
சிததிரமுமாவிபெறுஞசெஞசொலா   ளததிகிரி
வெற்பாந்தனியுலையுமேகததுருததிகொடு
கற்பாமனிலக்கனலூதப   பொற்பான
வெண்டிக்கைமுட்டு*மிருட்கிரியிலீசனூர்
கண்டககடுவிரும்புகாய்நததனை   யண்டம்
பரிக்குமராக்குறட்டிற்பற்றிவடவெற்போ
னிருக்குமடைகவ்விவிட்டு   மருத்துளவோ
னேனையிடிக்கூடமெடுத்தெற்றியெமக்கொல்லன்
றனமைததவேலபோற்றடஙகண்ணாள்   வானவாகோன

௩௫௫ மேவாரிலந்தவிருததாசுரன்மெய்போற்
பூவானமுட்டப்புடைததோஙக   வோவாது
தாராகணந்தரளததாராகிப்பேரண்டம்
வாராகியற்றைறகருமற்றைறநாட்   கோராது
போகப்பொழுதிற்புடைததுப்பொருமிமிக
மோகததைநலகுமுலையிணை   மேகத்துக
கப்பாலுநீண்டவதிரேகைமேனிலத்தி
லெபபாவையரோடினிதிருந்தே   யொப்பிலா
மாணிககவம்மனையேழ்வாஙகியெறிநதேறபளவிற்
சேணிற்புயலிலவைசென்றொளிப்பக   காணு

௩௬0 டிகைததுமடவீரிதுநாஙதேடுவதெஙகென்றுள
வகைககுடகவெற்பின்மழையோ   டுகுப்புணடு
காவிரியிற்சேருங்காணகாவையரனூகவென்று
நீாவிழுந்தவாரமபோனேருஙகா   ணுவல
ரன்றூற்றிவிட்டபொருளாரூாகுளததுவர
வென்றூற்கிதுவுமெளிதெனன   நனறென்

---

*இருட்கிரியெனபது நீலகிரியலையினை.

றுவந்துபரவியுடனேசோதிப்பா
ணவஙகொளதலநினறுநணணிச சிவனகோயி
லெய்தவமைந்தாளவவெல்லைககட்டில்லைக்குட்
செயதநிருததததிருததாளன் மெயதனைப்போ
னநதிககினியபிராஞரணருநாகருமுன்
சந்திககவாஙகியபொற்சாயததான வெநத
சுடலைதனிலாடியுநதானசுததஞைககோ
சடிலமிசைகஙகைதரிததோ னுடலி
னிறைந்தபணிபழகனீலககிரீபன
சிறநதசெழுநீததிரளான பிறஙகற
குமரிகொருபாகனகோடுகுழலழகாந
தமரிததுவேதந்தயஙக நிமிர்சிகரப்
பாரமணிததேரிற்பவனிவரக்கண்டளவே
யோருநினைவொன்றுசெயலொன்ருகி யாரத்
தழுவுவாள்போற்செல்லுநதன்றனபாரததைக
கழுவுவாள்போற்கணணீரகாலு நழுவுங
குருதுஙகலையுஙகுவலையததாகொள்ள
யுருகுநதளருமுயிாககுஞ் சருகுபடு
ரெஞ்சோடயருமிவணோகண்டுங்காணுவம்
பஞ்சோனுடனசெனருஞதியான செஞ்சோதி
சிதரமணிமகுடதெயவததிருததேரி
லததிருவீதியகன்ருஙகொருததி சுதத

---

## *தேரிவை

---

தெரிவைபுவனததிலோததமைவெள்ளிக
கிரியின்மருவாதகேகை கரிவனத்தி
லத்தற்குநஞ்சையளிததபிழைக்காம்போதி
மெததப்பயந்துபயனவேறுதவி சித்ததைை

---

*தெரிவைககுபபருவமிருபததாறுமுதலமுபபததொனறளவுமாம்.

யனபுறுததவேண்டியிரண்டாவதோர்பிறையு
முனபடைததஙொவவாதமுணடகமு மின்பரப்பும
விததுருவுமொப்பிலவெணமுததுமேலான
புததமுஞ்ஞசஞசரிககப்புஞ்சகமுங கைத்தலததின்
முன்னிரக்கஞ்செய்யுமுதலவனுரைபபோலப்
பின்னிரககஞ்செயயுமபெருவிடமு மினனிசையைத
தானேமுரலுமணிசசஙகுஙகிளைததருவும்
வானேபெருதோஙகுமவாரணமு மான
௬௨௦ தனிமையெழிலவலலிசாதகமுமபோத
வினியவரமபையினமும் புனிதமா
மலலலளிஞெணமெவராலுஙகமடமு
நலலனமுஞசோததுமலாகாரிஙிக ரலலவெனப
பெணணுருவமாகிப்பிறஙகுமணிபாரிததுக
கண்ணுதனமுனவிட்டனையகாட்சியாள வணணமலே
யீசனாவேணடியிருந்தவஞ்செயயாநின்ற
ஆசியனையவுரோமததா ளாசை
பகலுமிருளாகாமற்பாதுகாத்தோதி
முகிலினவிதுவைமுடிப்பாண மகர
௬௨௫ முகஞுததிசூழ்ந்தவுலோகரையுமுலோக
மகளிரையுமாலாக்கவலலாள சகல
வனிதையர்சூழமதனுலையததி
லினிதுமலாப்பீடததிருநது தனதருகு
சேவிததுநிற்குஞ்சிலவேளைப்பாாத்துன்னை
யேவிப்பணிகொணடோமின்றளவு நீவிரும்ப
யாருசெய்யுஙகைமாறியம்புவாயென்பாளைப்
பூஞ்செய்யதாட்பணிநதுபோர்மார னீஞ்சையெமக்
கீநதாணிபக்காவிறைவனவனைச்செயிகக
வாயநதாய்ந்துபாாப்பேனறிகிலேன வாய்ந்த
௬௩௦ படைததுணையாய்நீவநதாற்பஞ்சசரததாலே
விடைததுணையானைப்பொருதுவெலவேன ெருடுத்ததொடை

வாகையெனக்காமவலப்பாகமககணமே
தோகையுணககாங்தொடஙகென்ன வோகையுட
னீதோவரிதெனறெழுந்தாண்மெய்யில்லானே
நீதேரிலவாவெனப்பின்னோகொணடு வீதிதனிற்
சென்றுளவிழிவேறறிருப்புருவவிற்கோலி
நின்றுளலகுறறோநிறுததினுள் குனறை
முறிககுமுலையானேமுன்னணியுமொய்கார்
நெறிககுழனமாப்பின்னணியுநிறபக் குறிககைவளைத
தானே மருஙகுதழைப்பவணிவகுததாள
யானேவனததானுமெளியளே சேனேக
கணநடாவனனியார்கைமுயன்றுபோத
வணஙகுமயிலவடிவர்வாழ்தத விணங்குமுடி
யமபுருவஞ்சீதரனேயாகச்சிரமேரு
வின்பசிலையாயெதிரேந்த வும்பா
கரபததிரமபொழியக்கலலாரவாகு
வரையிறபணிவலையமன்ன வரியின்
முடுகுசினததுரகனமுனைகைசெறிய
வடுதிறற்கைமாமணிநின்றாப்பக் கொடிய
துடியதிரநெற்றிக்கணசோதிதரவேத
வடிவமுறுந்தேரேறிவந்தான பிடிநடையாள்
கண்டாணிளைந்தகருமமறந்தாள்காதல்
கொணடாளுடலபுளகங்கூட்டினள் புணடரிக
வம்பராவாதிப்பெருஞ்செல்வாவானைககாச்
சம்புநாதாசந்தரசேகரா பைம்பவள
வணணுவசந்தவழகாமதனேயடு
கண்ணுவடியேனேக்காவென்று ளொண்ணுதலாள்
போற்றுவதுகேட்டுப்பொருளுகிலெம்மையவர்
தூற்றுவளோவெனறலைாததூறறினைகூறறுதைததோன
றன்னேயடைந்தோர்க்குததவறுவரவொட்டுமோ
மின்னேயுவந்துவிழிவைத்தா பின்னே

யுருவிலியாங்கென்செய்தாளெனுதவாளொருத்துச்
செருவிலியாயீசனபின்சென்றான் வருதெருவிற்

## *பேரிளம் பெண்

பொற்புறறவளொருத்திபொனனாட்டின்மின்னாகுப்
பிறபட்டுமுறபட்டபேரிளமபெண வெறபின்மதிற

காவைச்சிவனாரைப்போலேகரடதட
மாவைப்பணிவிகரும்வார்தையா ளாவிவதை

பண்ணுதலாறபேணுதலாற்பாகீரதிமுடித்த
கணணுதலானின்னருள்போற்கண்ணிறாள் வணணலழ

கெல்லாஞ்சுமநதுகனத்தேயோவினியதன
நலலாதுமாறிலலையாகியோ நிலலாக

கிளாததிசையிலிடங்கிட்டாதவாறே
தளாசிறறிடைககிரங்கித்தாளோ கிளாசிற்

றிடையரிகண்டானையெதிரபபதோவிநதரன்
படையிலடிசாயற்பதமோ விடையோ

னழுநதுவளையாகததணையப்பெறாதே
யெழுநதுவளாநதெனனபயனென்றே செழுங்கடலி

லாங்காலகாலங்கணடஞ்சியநாளண்டரெல்லாம
வாங்காதுகைவிட்டமநதரமோ நீங்கா

தடிமுடிவுகாணாதரியயனஞ்சிப்
படிமிசையினவீழநதிறைஞ்சுமபணபோ விடையோனைப்

பைஞ்சிலநதிநாலைபபறிததகறறியேபணியுங
குஞ்சரமோவெனனவிழுங்கொங்கையா ளஞ்சியுமை

காணாதரனகலநதாற்காயததிவையழுந்தில
வீணாரவாரமாமேயெனறே சேணாடர்

வீடாரமானதனிவிலலாளனைததழுவக
கூடாதகாதலகொடுமையோ நீடறிவான

---

*பேரிளமபெண்ணினபருவ முப்பததிரண்டுமுதனாறபதளவுமாம.

மாணிக்கமுன்னுமணியொன்பதுமகத்தி
லேணிப்பசுவுறுப்பென்றெண்ணியோ காணு
மவையவத்தினெருலலையபிராமமெல்லா
மிவைகரகதலாவதென்னென்றே கவினிசைத்த
நாணுகியாபரணநான்கெயதியோகவமாம்
பூணாரமத்தனையுமபூணுதாள் பாணியுழைக
கன்றேந்தியைத்தழுவககண்டகணவைபபிரிநத
வன்றேவிழிகசெழுதாவஞ்சனததா டென்றிசையி
லோடாதகாற்றேறொழிநதாலுருவிலிககு
நீடாழிததேராகிதம்பத்தா ளோடாத
கஙகுறகளிறுகருபபுச்சிலைமலாகதோ
றிஙகட்கவிகைகுயிற்சின்னமீன தஙகுகொடி
கட்டாண்மைவேளுககுககாலமலாக்காலதது
முட்டாதுதவிவினைமூட்டுவொ ளெட்டான
தோளானையாறுபருவத்திலுநதொழுது
நீளாதரஙகூருநெஞ்சினாள் கேளாசொற்
கேளாதனவரதங *கேதிததிருப்பானை
வாளாதடங்கணமயிலொருத்தி †வேளாளா
பாணமுதவுபொழிலபார்க்கவாவெனறழைப்ப
வாணுதலும்போதகததுவான்சென்று ணீணிலத்தி
லைந்துநிலமுமைந்துகிளாகாவின்
வந்துவளர்தேமாவைமாமகிழை முநதியகல
லாலைவடததையருச்சுனததையாததிதனைப்
பாலையைவேயைப்பலாததனை நீலியைப்
புனனையைக்கூவிளையைப்புன்கைப்புனக்கடம்பை
வன்னியைககொன்றையைமாதளையைத் தனவனச்
சினைதருபாதிரியைததில்லையைக்காயாப்
பனையையிலந்தையைப்பராயைப் புனைக்குருநதை

---

*கேதிதமெனபது சங்கேதிதமெனபதின முதறகுறை.

†வேளாளரெனபது மனமதனை.

மாதர்பலருமயங்கிமடலேற
மேதகுதிணடேரில்வீதிதொறும  பூதரமாம்

ரெலவியைநோக்கிஞணிததருளைறநீழலெனச்
சொல்லியவறைைததொழுதிட்டா  ளெல்லை

நனஞவல்கணடாளவெண்ணுவலாய்க்கொணடு
தன்ஞவறீரததழுவிஞ  ளென்ஞயன

ஞனன்ஞேநீயெனறுஞ்சம்புவேயென்றேததி
யானந்தமாகுமவசமுறு  மேனென்னும

பஙகிறபசுஙகொடியைப்பாவிக்குஞ்சேவிககுஞ்
செஙகைசசெழுநீரத்திரள்திரட்டுஞ  சஙகரனே

யென்னுஞசிவமருட்கொணடிப்பாவைநிற்பவளை
னனநதொடாநடையாராவானைத  துனனறிவு

போந்ததோமின்னேநம்பெமமான்வெண்ணுவலிடஞ்
சோந்ததோவாஙகவரைசசென்றுதொழ  நோந்ததென்

ஞற்றியனைத்துவருமவ்வளவிலண்டரெலலாம்
போற்றிசெயசெயபோறறியென  நாற்றிசையுஞ்

சேனேர்மணனோராய்ததிரண்டுவரக்கல்லாரப்
பூனேனகயிலைப்பொருபபினேன்  வாணன்

குடமுழவுநாரதஞாகோதிலாயாழு
மிடமுடையமூவரியலும  படருக

திருசசெவியிஞயேனறெளிவிலாப்புனசொ
விருததியருள்கைக்கிசைவோன்  வாததிற்

சிறககுமயஞாசெருக்கியேசெததுப்
பிறககுநதெயவங்களபெருமா  ணிறககுமூநட்

சேவிஞன்கூடறறிருவீதியிலவிறகுக
காவிஞன்றெனஞனைக்காவிஞன  பூவிஞன

சம்புமுனிகவுரிதநதிசிலநதிகனல
வெம்புபருதிமதிவிணணவாகோன  கும்பமுனி

யற்ந்தாற்றுதுமோவப்பதுகமேடாறுஞ்
செறிந்தாலெனக்களித்தாள்சித்தம புறந்தழைத்த

தீர்த்தமகளீர் திருமால்பரவவருள்
மூர்த்தியவனிமுழுதாளவோன மாத்தேரின

வந்தான்மற்றவ்வளவின்மாதாராவீதியிற்கண்
டிந்தாதொழுபவனியென்றுரைப்பச் *சந்தாப

மாறினாள்பேரழகுக்காருமொவ்வாதீரென்று
கூறினாளைகதலைமேற்கூப்பினா டேறினாள

பித்தரேயாதிப்பெருஞ்செலவரேமடவார்க்
கெத்தரேவெண்ணாவலீசரே நித்தம்

புதியவரேயோராரம்பூண்டபெருமானே
யதிவிரகமானேனனையீர் மதனென்

னுருயிரைக்காய்ந்தாலனைத்துலகாள்வாயென்று
பேருமக்குண்டாமோபெருமானே நீருருவா

லும்மைவகுத்தமுறையாலுமக்குமையா
ளம்மைகண்டீரெம்மையிடத்தாளுவீ ரிம்மையில்யான்

றானுமவள்போற்றவத்திகண்டீர்தாழ்ந்தசடைக்
காணுமிமையாதகண்ணுங்கண்டீரே யானுமெடு

மாலுடனேவந்தேன்மலைவேளைப்பெற்றேனத்
தாலுமவளாகுநான்றப்பாதே யேலுமவட்

கொற்றைப்பாகந்தானுதவியதுவாங்கரிதேல்
மற்றைப்பாகந்தரினும்வாழ்வேனே கொற்றவரே

யென்றுமதியாதிசைத்தாளிறையோனு
மன்றன்மலர்த்தார்வழங்கினனே குன்றளித்த

வல்லிக்காய்த்தானஞ்சிமாரனைவாடடேலென்று
சொலவிக்காத்தாளவளுஞ்சோர வெல்லையிலா

---

* சந்தாபமென்பது மன்மதன்கணைகளிலொன்றாகிய சூதத்தினை,
இதனால் விளைவது சிந்தாகுலம்.

வில்லைகுனித்தான்வெண்ணாவநிழல்வீற்றிருந்து
தொல்லைசிலந்திமு[illegible]சூட்டினே றில்லைச்
சிவாவனத்தானெங்கள்செழுநீர்த்திரளா
னுவாவனததானபோந்தா னுலா.

---

## வெண்பா.

மெய்தநிறலோன்வில்லடியுமீனவன்கைமாறடியும்
புத்தனெறிகல்லும்பொறுத்தநீ—முத்தமிழோர்
செஞ்சொற்றனைவிரும்புஞ்செம்புநாதவடியேன்
புனசொற்றனையும்பொறு.

---

திருவானைக்காவுலா முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.



டாக்டர். உ. ... சாமிநாதையர்,
நூல் நிலையம்.
சென்னை - 600090.

திருவருட்சகாயம்.

# திருப்பிடவூர்ப்பதிகங்கள்.

இவை

திருக்குருகூர்

ஸ்ரீமத் ஞானசித்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருள,

ஸ்ரீ புவனாம்பிகைபக்தஜனசபையாருளொருவராகிய

திருவானைக்கா

சேஷய்யரவர்கள் வேண்டுகோளின்படி.

ஷை தேவஸ்தானத் தருமகர்த்தர்

ஆர். டி. ஜெகந்நாதராயரவர்களால்

சென்னை:

இந்து யூனியன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

துன்முகி௵-கும்பரவி.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

உ

சிவமயம்.

திருவருட்சகாயம்.

# சாத்துகவிகள்.

தஞ்சைமாநகரம்

பிரம்மஸ்ரீ

## வைத்தியநாத சிவராஜ யோகீந்திரர்

இயற்றியது.

சீர்பூத்த வையகத்தி லெல்லாம் வல்ல
சித்தரெலாஞ் செய்தவங்க ளனைத்தும் போந்து
நீர்பூத்த திருக்குருகூர் தன்னிற் றோன்றி
நிலவியவற் புதம்பலவு நிகழச்செய்து
போபூத்த சடாதார விளக்கங் காட்டிப
பிறங்கிரவி மதிசுடரின பெருமை யோர்ந்தோன்
காபூத்த பச்சைமலை முனிவனெனுங்
கருணைவளா ஞானசித்த கலைவல்லோனே. (க)

கலைவளரும் புலவன்முதற் பலரும் போற்றுங்
காதபுரி யெனும்பிடவூர்க் கருணைவாய்ந்த
சிலைவளருந் தனிப்புருவ மலைமான்பாகச்
செம்மலடிக கன்பகலாச் சிந்தையாலே
நிலைவளரு மற்புதநற் றமிழ்ப்பாமாலை
நிலவவணிந் தனுதினமு நீந்தற்கொண்ணா
அலைவளரும் பவககடலின் மிசைவை யென்ன
வடியரெலாங் கொண்டாட வணித்தான் மன்றே.

மாயூரம்

## கிருஷ்ணாநந்தயோகிகள்

இயற்றியது

### குழிப்பு.

தனத்தனா தானதத்தந்
தனத்தனா தானதத்தந்
தனத்தனா தானதத்தந் தனதானா.

திருத்தகுமால் போதிடத்தன்
சதக்கிருதாலோன் விகாத்தன்
திருக்கறவே சேயமுற்றன் பொடிபூசையே,

செயப்பரிவா லேயவர்க்கன்
றனத்துயர்சா ராதளித்தஞ்
சிவக்குறி யூடேயொளிக
கவுரீசனுந்,

தருக்குலமார் சோலைசுற்றுந
திருப்பிடலூர் வாழ்கருத்தன்
றனிப்பெருமான் வார்கழற்பங் கயமீதிலே,

தலத்தவர்வா னேருவக்குஞ்
சுவைக்கனிவார் பாகமுற்றுந்
தமிழ்த்தரு பாமாலையிட்டங் கொளிர்சீருளான்,

கருக்கணுறுதே யொழிக்குங்
கருத்தகலா ராயுமெக்குங்
கலக்கமிலா தார்கருத்தின் படிவீசுமோர்,

கதிககருணா சாகரத்தன்
சடாதுறுகோ யாவுநற்றண்
கடைக்கணினாலே தூரத்துந் தவசீலனுஞ்,

செருக்கிளாவே லோணருட்டின்
றுசித்தர்பலோரே களிக்குஞ்
சிறப்புடையா னூழ்கடக்கு         குருநாதனே,
செழித்திடுபொவாணர் மொய்க்குந்
திருகுருகூர் ஞானசித்தன்
திகைக்கடன் மாஞாலமெச்சும்         புகழானனே.

---

கோயமுத்தூர் ஜில்லா வட்டமலை வித்வான்

முத்துஸாமி ஐயங்கார் என்று வழங்குகிற

## வேங்கடாசாரியர் இயற்றிய

### அறுசீரடியாசிரியவிருத்தம்.

சீரோங்கு பலவளஞ்சேர் குருகூரி
    லவதரித்துச் சித்தர் தங்கள்
பேரோங்க மூவாண்டிற பையரவின்
    முகமுத்தம பெற்றோ னென்றுங்
காரோங்கு காங்கயத்திற் குழவியிலாற்
    கனுகரித்த கணய மூர்த்தி
நேரோங்கு ஞானசித்த னெனும்பெயர்கொண்
    டெமையாள நினைவு கூர்வோன்.

தெருணிறையும் பச்சைமலை தனில்வளருஞ்
    சற்குருவின் றெரிசனத்தால்
மருணிறையும் பாவமுண மாறறுதல
    மெனஞ்றோர்ந்து மகிழி னுள்ள
அருணிறையும் பலதலத்து வானைக்கா
    வதிகமென வகத்துட் கொண்டு

பொருணிறையுஞ் சித்தியெலாம் பொருந்தவந்தத்
தலத்துறையும் புண்ய சீலன்.

சாந்தமெனு முதற்குணமே யுருவெடுத்து
வந்தனைய தவசிரேஷ்டன்
பாந்தளணி பிரமேசர் பதமலர்க்கோ
ரீரைந்து பதிகந் தன்னைச்
சேந்தன்விநா யகன்மகிழுந் திருப்பிடவூ
ரெம்மானைத் தியானித் தேத்து
மாந்தரறி வுற்றுய்ய வாருயிரி
னமிழ்தமென வழங்கி னானே.

---

திரிசிரபுரம்

எஸ். பி. காலேஜ புரொபெஸா

குருராவு பி. ஏ. அவர்கள்

இயற்றியது.

திருககுருகூா தனிற்றோன்றி துறவறமே
மிகவிழைந்து சித்ததேோங்கு
தருக்குமுத லாந்துகட்கா ரிருளகல
யோகவொளி சார்ந்துமீணடெங்
கருககுழியில் வீழ்ததாத மெய்த்தவமும்
வாய்ந்தழிவில் கதியைக்காணபான்
மருககுலவு கொன்றைமுடிக கடவுளடி
யெஞ்ஞான்றும் வழுததுசீலன். (க)

தானகொணட நெறிவிளக்கு ஞானசித்த
னெனும் பெயரைத் தியககப்பெற்றோன்

தேனைக்கொண்ட சுவைகொண்ட சொல்லினங்கு
பாமாலை சிறக்கச்சொற்றேன்
கூன்கொண்ட வளைகுதிக்குந் தண்பழனத்
திருப்பிடவூர் குடியாமன்னு
மானைக்கொண்ட கையனுமை யவள்கொண்ட
மெய்யனிணை மலர்த்தாண்மீதே (உ)

---

சென்னை-அஷ்டாவதானம்

## பூவை-கல்யாணசுந்தரமுதலியாரவர்க

ளியற்றிய

### இரட்டையெழுசீர்விருத்தம்.

சீதரனு முகன்போகி யஞ்சலிகொண் டிருமருங்கிற்
சேவைசெய்ய தினிது வாழ்த்த
திகழயிரா வதமூர்ந்து பொற்கயிலை யினுக்கேகுந்
திருநாவ லூர ரோடு
மாதரவி னிற்போந்த சேரர்பா டியவுலா
வதனையன் பாகசாத்த
னவனிமிசைக்கொணர்ந்தரங்கேற்றிடுதற்கேற்றதோ
ரரியபிட வூரின் மேவும்
பூதரமேந் திடுபரமற் கருந்தமிழ்தோத் திரப்பனுவல்
பொருந்தியநற் பணைகள் மேவப்
புத்தமுது பாலபழந்தேன் கன்னல்சருக் கரையாதி
பொலிசுவைக யக்கச்சொற்றனை
மாதரமிக குயர்பொதிகை வருமுனியா தியபெரியா
மன்னுசவை யினுமுலாவ
வல்லசிவ யோகியென நேநிலவு ஞானசித்த
வள்ளலெங் குருநாதனே.

## திரிசிரபுரம்.

## ஸெண்ட் ஜோஸப்காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

# முத்திச்சிதம்பரம் பிள்ளையவர்கள்

## இயற்றியது.

பூம்பொழிலுடுத்தபொன்னித்தண்புனல்
ஓம்புதலொழியாவுயர்சோணாட்டுள
கொன்றையஞ்சடைமுடிக்கோமான்றன்னருள்
மன்னுயிரெய்தமகிழ்ந்தமர்பதிகளுட்
கந்தவேண்முதலாங்கடவுளர்பலருந்
தந்தம்பெயராற்றடங்களமைத்து
வந்தனைபுரிதலிற்கந்தமாபுரி
பிரமபுரம்பிடவூர்படையூரே
வரமண்டேகபுரமவியாக்கிரபுரம்
சூரியமாபுரந்தொல்சாத்தனூரென
வோரெண்பேர்புனையுத்தமத்தானத்
தருளுருவாகியவமலனைமாதேவனை
பொருவருங்குணத்துப்புட்பமாலினியெனும்
அம்மையைமணம்புரிந்தடியவர்க்கருளச்
செம்மையினிருந்தலைச்சிறப்பக்கேட்டு
அடங்காவன்பினனைவருந்துதிக்க
மடங்கலையுதைத்தோன்மகிழப்பாடினன்
தென்றேடென்னுநன்றுடைத்தனிடைத்
தீதிலாக்குருகூர்ச்செழும்பதியதன்கட்
சாதகமுற்றுச்சகமெலாமதிக்க
வோதாதுணர்ந்திட்டெய்வகையறிந்து
போதமளிக்கும்புண்ணியர்த்தேடி
மேதினிமுழுதுந்திருவக்கருதிச்

சென்ஞுனொனறிறசிவன்பேரருளான்
நன்ஞானதனைநலகுமரனைக்காப
பதியிடஞானமும்பலவகைச்சிததியுங்
துதியுறதவமுந்தூய்மையுஞ்சீலமும்
படிவஙகொணடெனபபசசைமலையமா
அடிகளைககண்டானநதமபெருகி
மெய்ப்பொருள்காட்டெனப்பொற்பதம்பணிநது
நிழலெனததொடாநதுநெடுநாளுறைநதவன
கண்ணுதன்முதலாயகடவுளர்தமக்கு
மெணணிலாப்பதிகம்இனிமையிற்பாடி
மொழிபொருளுணாநது முறைமையினிருந்து
சிததாகள்புகழச் சிததிகளவாய்ந்து
எததலமதிகக விருததிடுஞான
சிததனென்றுளாகருஞ செழுநதவததோனே.

---

திரிசிரபுரம

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

மாணாககருளொருவராகிய

திருவானைக்கா

## சோமசுந்தரம்பிள்ளையவர்கள்

இயற்றிய

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

ஏர்மேவு சிருட்டிதிதி யியற்றுமயன்
விண்டுமுத லெண்ணில்தேவர்
நார்மேவிப் பூசைபுரிந் தவர்க்குமன
விருப்பமெலா நல்கிப்பாமேற்

காமேவு பொழிலுடைசூழ் தெக்காலுங்
கெடாதொளிருங் கனம்பெறறோங்கு
சீரமேவு திருப்பிடவூர் தனிலமருஞ்
சிவபெருமான திருததாட்கன்பாய். (க)

முககனியுங கற்கண்டு முதிர்சுவைய
கோறறேனு மூடியாத்தேவா
மிககருந்து விணணமுதுங் கைப்பவுலகி
னிறபுலவா விரும்பிப்போற்ற
மிககநயம் பெருசாதப் பாமாலை
புனைந்தணிந்தான் மேனுளீட்டுந்
தக்கசிவ தருமததாற் றிருக்குருகைப
பதியிலவ தரித்தசீலன. (உ)

பிரமனமால் முதல்வானோக கரியபெருஞ்
சித்தியெலாம பிறஙகசசெயயும
வரமனமா மலயமுனி முதற்பதினெண்
சித்தருமோா வடிவுகொண்டு
திரமன்மா புவியினிடை வந்தனையன்
சித்திபல செய்தலாலே
நிரமன்மா ஞானசித்த னெனப்பெயர்கொள்
தவப்பெரிய நிமலன்றானே. (௩)

கும்பகோணங்காலேஜ் தமிழ்த்தலைமைப் பண்டிதர்
**சி. தியாகராஜ செட்டியாரவர்கள்**
மாணாக்க ரொருவராகிய

## திருவானைக்கா - சேஷய்யரவர்கள்

இயற்றிய

### விருத்தம்

அருள்விளங்கு முளத்தயனமா லதிசயிப்பக்
கதிர்களுல கனைத்துஞ்செல்ல
மருள்விளங்கும் விந்தமலை மமதையினை
யடக்குமுனி மகிழ்ச்சிகொள்ள
இருள்விளங்கு மெங்கண்மனத் தவிசைமலை
யினையமிழ்த்தி யெண்ணில்சாத்தித்
தெருள்விளங்கு வழிகாட்டுமெ ஞானசித்த
மூர்த்தியெனச் சிறக்குஞ் செம்மல். (க)

குருகைநகர் தனிலுதித்துக் குழவியிலற
புதங்காட்டிக் குலதெய்வத்
தருவைநிகர் காமவியு மானைக்காப்
பெருமான்றன் றளியில் வாழ்ந்த
வருமறைதோ பசைசயலை முனிவனருட்
கடற்குளித்த தனயனுலே
திருவருளார் றமிழ்ப்பதிகம் பலபாடி
யானைக்காத் திகழுங்காலே. (உ)

விண்ணுலக மண்ணுலகும் விளங்குதிருப்
பிடவூர்வாழ் விமலன்றனைக்
கண்ணெதிரிற் றரிசித்துக் கசிந்துருகிப்
பணிந்தேத்திக் கதியைச்சாரப்

பண்ணமையும் பதிகமிகக் கருணையுடன்
மொழிசிறக்கப் பாடித்தந்தான்
கண்ணியவெப் பொருளுமடி யவர்க்குதவி
கதிகாட்டுங் கருத்துளோனே. (௩)

தென்னிந்தியா ரெயில்வே
டிராபிக் மானேஜராபீஸ் ஹைட்டரும்
இந்நூலாசிரியர் திருவடிச்சம்பந்தருமாகிய
தி. அ. இராமசாமிநாயுடு அவர்கள்
இயற்றிய
பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சீர்பெற் றிலங்குந் திருவானைக்
காவின் வடபாற றிகழ்பிடவூர
செழிக்க வளருஞ் சிவபெருமான்
றிருசதாட்கணபாயச் செய்யதமிழ்
ஏர்பெற றிலங்குந் திருப்பதிக
மியற்றி யெனைப்போல வார்களுமே
யேகதித துதிகக வருள்புரிந்தின
னினிதா யளிததா னெததலத்தும்
பேர்பெற் றிலஙகுங் குருகூரிற்
பிறப்புற் றிறப்பற றிம்பெரிய
பேரான் ஞான சிததனெனும
பெருமை யுடையா னடியேனு
நார்பெற் றிலஙகச் சாகாத
நற்காலும் வே காதசலையு
நாளும் போகாப் புனனிலையு
நவிலுங் கருணைக குருபரனே.

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

மாணாக்கர்

புழலை - திருநாவுக்கரசுமுதலியாரவர்கள்

இயற்றிய

அறுசீர்விருத்தம்.

மஞ்சுபொழிற் றிருவானைக் காநகரி னிற்பாங்கா
    மருவி நாளு
மிஞ்சுமெழி லறபிடவூர்த் தோத்திரங்கள் பறபலபண்
    விதங்கண் மேவக்
கஞ்சனுங்கண் டதிசயிக்கக் கவிணைத்து மேயிலகிக்
    *களுற ஞான
விஞ்சைமிகுஞ் சிவயோகி ஞானசித்த மோனமுனி
    விளம்பி னுறல்.

சாத்துகவிகள் முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

உ 1597

திருவருட்சகாயம்.

# திருப்பிடவூர்ப்பதிகங்கள்.

ஆனந்தநிலை.

திருவருட்சகாயம்.

வானாய்க்காலனலாய்மதியாய்மதிக்குள்ளொளி
யாய்க், கோனாயாருயிராய்க்குணங்குறிகடந்தோங்
கிடுவோன், தேனூருமபொழில்சூழ்திருப்பிடவூர்ச்
செல்வனென்னுள், தானாயருள்புரிந்தாலதைத்தா
ன்றடுப்பாரெவரே. (க)

எக்காலத்துமுளானமறையேத்தியதேவாக்கெல்
லாம, மிக்கோன்றிருப்பிடவூர்தனில்வித்தகனபொ
ற்பதமே, புக்காதேமடவாரபொருட்டாகும்புலைய
னெனைத், தக்கோனெனவருள்செய்தாலதைத்தா
ன்றடுப்பாரெவரே. (உ)

எனதாயன்னியமாயுண்டில்லையென்றேபலரும்,
கனதாபப்படவேகதிகாட்டுதிருப்பிடவூா, அனகா
வெனபவர்கட்கழியாவரமீந்தருள்வோன, தனதா
ய்வந்தருள்செய்தாலதைத்தான்றடுப்பாரெவரே.

பகையாமைமபுலனுமொன்றுபட்டிடுமெய்யடி
யாா, குகைதோறுமகிழ்நதேயருள்கூடினரிஙகெளி
யேன, திகையாவண்ணமுமேதிருப்பிடவூாக்குள்
ளமாவோன, தகையாய்வந்தருள்செய்தாலதைத்
தான்றடுப்பாரெவரே. (௪)

பாமாலைபுனைந்துமநல்லபசலையாற்றொழுதெங்,
கோமானேயருள்செய்யெனக்கூறிடுவோாக்கருள
வோன, தேமாவாழைகமழ்திருபபிடவூாச்செல்வ
னெனனுள், தாமாய்வந்தருள்செய்தாலதைந்தா
னறடுப்பாரெவரே. (௫)

இனிநானெனனசெய்வேனுலகெஙகுமமாநதவ
வென், அனியாயநதனையேயெடுததாக்குறைப்பே
னெனவே, துனியாவுநதொலைக்குநதொனமையாந
திருப்பிடவூரான, தனியாயவாநதருளசெய்தாலதை
ததானறடுபபாரெவரே. (௬)

செப்பாருஙகலைகளபலதோநதநறசிததாகளும,
எபபாருமபுகழபபணிநதேததுந்திருபபிடவூா, அப
பாவெனனாசேயருளாதியனேயெனுமுன், தபபா
னெனறருளசெய்தாலதைததானறடுபபாரெவரே.

நீஙகாததொண்டுசெய்துமமணநிலைபிறழாதிருந
தும், பாஙகாய்ப்பத்திசெய்வோாதினமபரவுந்திரு
ப்பிடவூர், ஓஙகாரப்பொருளாயுறைவோனடியானி

னிமேல, தாங்காளென றருள்செய்தாலதைத்தான் றடுப்பாரெவரே. (௮)

மட்டாருங்குழலாா தமமய்யவிலேதினமும், வெட்டுமுலா தருள்வோன திருப்பிடவூர்ச்செலவனருள், தொடடேபற்பலவாமதுதிசெய்திடுமென்முறையைத், தட்டாதருள்புரிந்தாலதைததான் றடுப்பாரெவரே. (௯)

பெண்ணையாணவியாய்ப்பிறவாதபெருந்தகையாய்க், கண்ணைய்க்கண்ணினுளேகருமாமணியாயமர்ந்தோன், தெண்ணீராாவயலசூழ்திருப்பிடவூர்ச்செல்வனெனனுட்,தணணருமருளசெய்தாலதைத்தா னறடுப்பாரெவரே. (௧0)

வள்ளாலெனறுனையேதினமவாழ்த்திடஞானசித்தி, யெள்ளாதேகொடுததுமகடுவேமததிற்றுாது சென்றும, வெளளாளனகொடுததுமவிணனேற்று மபிடவூரான, தளளாதருளபுரிநதாலதை ததான்றடுபபாரெவரே. (௧௧)

திருவருட்சகாயம்.

---

## வைராக்கிய நிலை.

### திருவருட்சகாயம்.

அடியவர்முனிவரமராகள விஞ்சையவரோடும, நெடியவனயனொடொவ்வொருதேவா நினைவின்கண,படிபவனபிடவூரகருளளெழுநதருளும பரமேசன்,அடியிணையெபபோதுமபுகழ்நதேத்துமடியீரே.

பாவுறுமறையுமறைமுதல்வரும்பலகாலுங், கர
மலரதனிற்றருமலாகொண்டேகளிப்புற்று, விரவு
றும்பிடவூர்க்குள்ளெழுந்தருளுமவிமலேசன், சர
ணமதடையமரணமதில்லைசகத்தீரே. (௨)

நறைகமழ்கொன்றையறு கொடுவில்வந்தனைநா
ளுமம, முறைபெறத்தனதுமுடிதனிலமைத்தோன
மூவர்க்காய், அறைகடலுலகிற்பலமுறையருள்வா
ன்பிடவூரான், மறைபுகழ்பதமேதுணையெனக்
கொள்வார்மடியாரே. (௩)

வன்னியுநாகமவளர்புன்சடையார் மதிகங்கை,
சென்னியிலுடையாரவிடைதனில்வருவாரசிர்மோ
ர்கை, மின்னியதகையாரபிடவூரபதிக்குள்விழை
கினறா, அனனியமில்லாரவாதுணையென்பாரழி
யாரே. (௪)

நால்வருக்காகநலமுடன்கல்லானன்னீழல் மே
ல்வருஞ்சோதிகாலனைக்காற்கீழ்விழசெய்தோன,
பாலதருமநலலபதநதருமபிடவூரபதிவாழ்வோன்,
நூலதரும்பதமேநோககுவரெனறுமநடஙகாரே.

இருநிதிதனையுந்திரணமதாக்கொண் டிருமாந்து,
குருபதமதையேசிரமதிலமாத்துங்குறியாளா, ஒரு
பதினெண்மருளந்தனிலமாவோனபிடவூரான, திரு
வடியதுவேசெயுந்துணையெனபாரதிகையாரே.

பூதத்திரளுஞ்சூழ்ந்திடுசுடலைப்பொடிப்பூசி, நா தத்திரள்களதற்குணடிக்குமநடராஜன், வேதத்திர ள்களவிளங்குமபிடவூர்தனில்மேயான, பாதத்துக ளோரணுவேபெறுவார்பழியாரே. (எ)

அங்கமொராறுமருமறைநான்குமன்பாக, எங்கு முளானெனறியமபுதற்கேறபவிசைந்துள்ளான், சங்குகளூருமவயலசெறிபிடவூர்தனிலவாழ்வோன், கொங்குகமழ்நதபதநதுணையென்பார் குறையாரே.

தாயுந்தமருந்தநதையுமறறுந்தனிப்பேறும், ஆயுங்கலையுமருளெனக்காண்போாகநருள்செய்வோன், பாயுநகயலகள்வயலசெறிபிடவூர்பபதி வாழ்வோன், ஈயுமபதமேயியல்பெனக்கொளவாரிறவாரே.

ஞானமுஞ்சித்திநாடொறுமவேண்டுமநல்லோா தம, ஈனமகற்றித்தானவனுககுமெஙகோமான், தானமுந்தவமுந்தழைதநிடுமபிடவூர்தனிலவாழ்வோன், வானமாபதமேமனத்தினுட்கொள்வாாவாழ் வாரே. (கo)

திருவருட்சகாயம்.

அடிமைத்திறம்.

திருவருட்சகாயம்.

ஆடினதாரரவ மரை தன்னிற்புலியதளும்,அருந் துடி யுடன் மழு வங்கையிற றுனிலங்க, நாடின தன்முடிமேல் நளி ரேயுறுகங்கையுடன, நலிவுறும

பிறை யொடும நவையிலவெள்ளறுகும, சூடினை யேழ்சபையுந் துணிந தாடினைதொண்டாகடகாய் துணை யுன தடி யெனச் சூழ்நதிடு மெற்கிரங்கித, தேடினகாவிரியின வட பாற்பிடவூரிலுளான், திரு வருட் கெதிா தினஞ் சேவித்துநிற்குதுமே. (க)

வரையரையன்மக ளார் வாமத்திலமகிழ்ந்தருள, மல ரய னரி முதல மங்களஞசொற்றிடவுங, கரை யிலசித்தர்களுங் கரு டாதிகநதருவாகளுங, காந் தொழு திறைஞசிடக கவினுறுவெள்விடைமேல, விரைசெறிகொன்றையுடன வெளளெருக்கணிந்த ணபாகள்முன விதவித மதா யருள் விததகனெற் கிரங்கித், திரைசெறிகாவிரியின்வடபா றபிடவூரிலு ளான, றிரு வருட் கெதிா தினஞ் சேவித்துநிற்கு துமே. (உ)

சினமிகுகாலனையுந் திரு வடியதனுலுதைததுச், செழும முனிக் கருள் செயுந திருக்கடவூரிலுளா ன, கனமிகுமேருவையும கடு வாசுகிதன்னுடனே, களிப் புட னமைத் துமபின கதிரநகையாற்புரத தை, அனலகொளவேயழித்தோன றமையண்டின ரககினபுறவே, யமை யொடு மிக மகிழ்ந தாடுவ னெற்கிரங்கித், தினமிகுகாவிரியின் வட பாறபிட வூரிலுளான் றிரு வருட் கெதிா தினஞ் சேவித்து நிற்குதுமே. (ங)

தருவளரூாவசியுஞ் சசி சரஸ்வதிசெந்திருவுங,
தனி தனித் துதித திடத தண்ணருளைப்புரியும, ம
ருவளாபூஙகுழலாா மாகதவலவிதனனுடனே,மன
துவந் தடி யவா மதிதனிலேயமாவோன, கருவள
ளைம்புலனுங் கான கததையெரித்தருளுங, கன
லெனத தூரி யமேற காண்பவனெறகிரங்கித், திரு
வளாகாவிரியின வட பாறபிடவூரிலுளான, றிரு வ
ருட் கெதிா தினஞ் சேவித்துநிற்குதுமே. (௪)

ஹோதகஞ்சற்றுமிலான் றனைத துணையெனவந
தடைவோா, தொழுந தொறு மெழுந் தருள தோ
ன்றிடக்காததருள்வோன், வேதமுதறகலைகள வித்
தாயவெணணீறணிந்து, விண்ட தனில வரு பவன
விணணவர்கோமணியாம, மேதகவீயெறுமபும்
மெலி வுற்றசிலந்திபணி, விரும் பிடத தரும பதம
விதிபபவனெறகிரங்கித, தீதகல்காவிரியின் வட
பாற்பிடவூரிலுளான், றிரு வருட் கெதிா தினஞ்
சேவித்துநிறகுதுமே. (௫)

ஓஙகியசூலமொருகரததுடை பவனவிடையதன
மேல், உகந் தவன சடை தனி லுலவியகங்கைத
னைப, பாஙகுடனற்றவத்துப பகீரதனுக்கருளபுரிந
து, பாதலமுதற்பட பரவிடசசெயபரமன், வாஙகி
யமாமதியு மதில வனனியுமத்தமவைத்தோன,மலை
மக ளொருபுறம வாழ்பவனெறகிரங்கித், தேங்க
மழ் காவிரியின வட பாற்பிடவூரிலுளான், றிரு
வருட் கெதிர் தினஞ் சேவிததுநிறகுதுமே. (௬)

உரிதருநாகமுட னொளிர் தருசிரமாலையணிந்,து
மையவள் மகிழ்ந்திட வூர்தொறுஞ்சென றிரந்து,
பரிதருவெண்டலையில் பலிகொண்டிடுகின்றதொரு,
பரம பரன நிரந்தரம பாக்கியந்தந்தருள்வோன,
எரிதருநீண்மழுவோர் கரத் தெடுததவனனமுகன்
மால், இறைஞ் சிடற் கரியவ னேனுமிலெற்கிரங
கித், தெரிதருகாவிரியினவடபாற்பிடவூரிலுளான,
திருவருட கெதி தினஞ் சேவித்துநிற்குதுமே.

மெயவகைகண்டுணரா மிக வேதாருகாவனத்
தோர், விளைத திடுந் தவத திறள் வேகமெலாமொ
டுககி, மைவளரியானையினரேல மகிழ்ந்தணிந்தவ
னிந்திரனமுன வருஞ் சலந்தரன னுடல வகிர்ந்தி
டுமாமுதலவன் ஐவகையாமபொருள்கட் கவை
யாயவைககபபாலும், அறி வுறுஞ் சிவோ கம
தானவனெற்கிரஙகித, தெய்வநற்காவிரியின வட
பாற்பிடவூரிலுளான், திருவருட் கெதி தினஞ்
சேவித்துநிற்குதுமே. (அ)

வெளிதருகொககிறகுங் கையில் விலனுடனம்
பதுமாய், வியாக்கிர மெனத் திகழ் மிருகமதனபி
றகே, தளிர் தருவேடனெனத் தனஞ் சயனமுனஞ்
சமர்புரியுந, தரு ணம தத னிலே தாங்கியவோரடி
யுங, குளிர்தருமாமலரா லடி யாரிடுநற்பணியுங்,
கொண்டணைத்தாள் பவன் குணமிலனெற்கிரங்கித்,
தெளிதருகாவிரியின் வட பாற்பிடவூரிலுளான்,
திருவருட் கெதி தினஞ் சேவிததுநிற்குதுமே.

சீர்தருவெள்விடைமே லருஞ் சிற்றிடையாளொ ருபாற், றிகழ் தர மிக மகிழ் தேவபிரானெமை யாள், போதருமேனக்கொமபும் மிக பேசியவா மையொடும், பிரி யம துட னணிப் பின்னிருமீன க்கண்ணுங், கார்தருகண்டமுமா யடி யாா கணுங் காணநின்றேன, கடை யனுக்கருள் செயக்காடடு வன்ஞானசித்தி, தோதருகாவிரியின் வட பாற்பி டவூரிலுளான், றிரு வருட் கெதிா தினஞ் சேவி த்துநிற்குதுமே. (௧௦)

திருவருட்சகாயம்.

## முத்திநிச்சயம்.

### திருவருட்சகாயம்.

திருப்பிடவூரமாதெய்வவெனபவ
ரிருப்பதுமேலுலகியாருஙகாணவே. (௧)

அகத்தினிற்றிருப்பிடவூரவென்பவர்
சகததினின்மிக்காாய்த்தானுமவாழ்வரே. (௨)

தரைபுகழ்திருப்பிடவூரவென்பவா
நிரைநிரைவாழ்வதுநிகழ்த்தவேண்டுமோ. (௩)

பரிதியுமேதுதிபகர்திருபபிடவூரக்
குரியவரியாவருமுமபராவரே. (௪)

வினையகறிருப்பிடவூரவெனபவ
ரனைவருமுத்தராயமாந்துவாழ்வரே (௫)

நித்தலுந்திருப்பிடவூரவென்பவா
நததியநினைவெலாநணணுநண்ணுமே. (௬)

விணணவாதொழுநதிருப்பிடவூரமேவினுற்
கண்ணனுங்தொழுமபதஙகணடுகொள்வரே. (௭)

பததியாய்த்திருபபிடவூரெனபாாபவ
மத்தனையுமகனறனபராவரே. (௮)

திருமகடுதிதிருபபிடவூர்சோநதவ
ரிருவினையுந்தொலைநதினபுறுவாாகளே. (௯)

தீனாகளாயினுநதிருபபிடவூரெனில
ஞானமுஞ்சிததியுநாளுமபெறுவரே. (க0)

திருவருட்சகாயம்.

---

## அருணிசசயம்.

### திருவருட்சகாயம்.

அரியமாமறையாவுமேதொழுதறியொணுமுதல வனெனுமம, பெரியனமபுவனுபதியுடனபிடவூருற்ற பெருந்தகை, வரிகொள் வணடினாசோலைசூழ்திரு வானைககாவினுமவாழ்பவ, னுரியனுகியவடியனே னையுமுளளவாறுவநதுணாததுமே. (க)

ஒளிகொளவெளவிடையுடையனுமதிலோலனுமி குசீலனுங், தெளிகொள்நீாசசரவணமுலாவியசெல

வனுககருடெய்வமாக், தனிகளார்திருபபிடவூாவா ழ்தருசங்கரன்காவைதனிலுளான், அனியனுகியவ டியனேனேயுமாண்டுகொணடறிவிக்குமே. (உ)

பழியுளேகிடநதெய்த்திடாதுளப்பண்பினுற்ற‍ுமனபினோ, வழியுளேவாவிழியிலைருளவள்ள லாயசதாசிவன, கழியுளேவளாநீலமாபிடவூரினு நகாவைதனிலுளான, சுழியுளேவளாசோதியோ டுறுசூட்சியுமபெறவருளுமே. (ங)

புண்முனேபலபாடுமனபனைப பாரெலாமபெற லைதகிடும, பெண்முனேநயமபேசியினபுறுமபெ ரியமாமறைப்பொருள்சொலும், விண்முனேதொ ழும்பிடவூாகாவையின்விரும்பி வாழ்தருவிததகன, கண்முனேவநதெனனுள்ளமேவிய கவலைதீாததரு ளகாடடுமே. (ச)

கூடியன்றமராடுசூரொருகொககெனுமபடிநின றமை, நாடிவென்றவல்வேலுடைத்தனிநாயகனறு தித்தேத்திடுங், கோடிசெஙகதிருதயமேநிகாகோயி ல்சூழ்பிடவூருளான், ஓடிவநதெதிாகாவையிலலெ னக்குறுதிதந்தருள்புரியுமே (ரு)

செயலெலாமொழிந்தரியமாதவசசெய்கைமேற கொளுஞ்சிநதையிற், பயிலுமாறருள்பணணவன பரமானவனபகைகதுலநதொழக், கயிலிலஙகியசூல முநதுடிதமையுமேயணிகருணையான, குயிலிலஙகி யபிடவூாகாவையிறகுலவுவோனருடகூட்டுமே.

கஞ்சமாமலர்மங்கையும்பெருங்கள்வனுகியகண்ணனும், விஞ்சவேபுகழ்வேதனுஞ்சதவேள்வியோனும்வியந்துமுன், றஞ்சநீயெனநிற்பவாழ்வருட்சங்கரன்பிடவூருளான், அஞ்சலென்றெதிர்காவையில்லெனதயர்வுதீர்த்தருள்செய்யுமே. (எ)

அனைத்துமாகியவண்டமீன்றருளன்னையாருளமகிழவே, கனைக்கும்வெள்விடைமீதிலேறியகடவுளனபிடவூருளான், வினைப்பிறப்பிறப்பகற்றுகாவையும்விரும்புவோனடியேனுள, நினைப்பிலேயிருந்தருளிநீயினிநீடுவாழ்கெனவருளுமே. (அ)

குனறினும்மனக்குகையினுநதினங்குலவநின்றபொற்கோயிலான், கனறிலுலவிளவெறியுமாதவன் கைதொழற்கருள்கடவுளான, தெனறலவீசுநற்காவையும்பிடவூருமேவியதேசிகன், எனறனுமமெனதெண்ணமியாவையுமினிமுடித்தருள்செய்யுமே.

வானநாயகன்பிடவூரமேவியவல்லிநாயகனகாவையுள், ஆனநாயகனஞானசித்தியுமருளுநாயகனனிடைவிடா, மோனநாயகனமுதநாயகன்முத்தரோடுறுசித்தாசூழ், தானநாயகன்றருமநாயகன்றமியேனுள்ளநதழைக்குமே. (க0)

திருவருட்சகாயம்.

---

## திருவருளீலை..

### திருவருட்சகாயம்.

வானவனவானவாகோனறன்னைச்சாருமமா பாதகந்தொலைத்தவள்ளலதனனைத, தானவனையனு

மனுக்கங்கருள்செய்தானைத், தலைவினைவார்தமமு
ளத்திற்சாரந்துளானை, யானவனை முனைக்குனிரம
றையினுணமை, யறைவானையன்பருளக்கவலைதீர
ப், போனவனைப்பூமபொழிலசூழ்படையூரானைப்
போற்றுதாாபவக்கடலுடபுகுவாரன்றே. (க)

குன்றவளைத்தோர்சிலையாயெடுத்துளானைக்
குறுமுனிக்கும்புலிமுனிக்குங்குறைதீர்த்தானை
வென்றுகொடுங்காலனைக்கீழ்வீழ்த்தினானை
வேதனடுத்தலைபறித்தவிமலன்றனைக்
கன்றுகுணிலெனக்கொண்டோன்வணங்குவானைக்
களமதனினஞ்சமர்த்துங்கடவுடன்னைப
பொன்றுதலிலபுகழோங்கும்படையூரானைப்
போற்றுதார்பவக்கடலுட்புகுவாரன்றே. (௨)

காதலித்தோாக்கருள்வானையீராறின்மேற்
கண்ணனையெண்ணுதார்க்கயலானறனைச்
சாதலிலாச்சிதர்குழாந்தமகொகளாருஞ்
சத்தியமாமறைபபொருளைச்சாதித்தானைத்
தாதலர்பூங்கொன்றையணிதடந்தோளானைச்
சரவணத்தானைககொழூமென்சாமிதனைப்
பூதலத்தோர்வணங்குதிருப்படையூரானைப்
போறறுதார்பவககடலுடபுகுவாானறே. (௩)

பாமலியுமபுலவனைநற்புலவாபோற்றும
பரமனைமுன்பிரமனையுமபடைத்துளானைத்
தேமலியும்பைஞ்ஞீலியிடமாக்கொண்ட
தேசிகனைத்திருவெறும்பீசுரத்துளானை

நாமலிதண்டமிழ்ச்சங்கத்தலைவர்க்கெல்லாம்
நாயகனைத்தாயகனைநன்முத்தோமும்
பூமலிதண்கழைசெறியும்படையூரானைப்
போற்றுதார்பவக்கடலுட்புகுவாரன்றே. (௪)

நிததமுமென்மனத்தகத்துநிலைத்துளானை
நீங்காமலெங்கணுமாய்நிறைவான்றன்னைச்
சத்தமுதலைந்தாகித்தரணியாகித்
தணபுனலாய்த்தேயுவாய்வாயுவுமாகிச்
சுத்தவெளியாயெங்குந்தாணுவானைச்
சோதியனைமாதவாதமமனத்தினுள்ளும்
புததமுதமருள்வானைப்படையூரானைப
போற்றுதாாபவக்கடலுட்புகுவாரன்றே. (௫)

வாதாடுமெளியேற்குமவாந்தந்தானை
வழிந்தொழுகுபெருங்கருணைமலர்க்கண்ணானை
சூதாடுமனத்தினாபாலதோனறுதானைத் [ச்
துயரமெலாந்தீர்ப்பானைச்சோதியானைத்
தாதாடு மானறயக்காரணிதிண்டோளில்
தமிழ்மாலையுந்தழைக்கத்தரித்தானறன்னைப்
போதாடுபொழில்மருவுபடையூரானைப்
போறறுதாாபவக்கடலுட்புகுவாரன்றே. (௬)

ஆண்டானைபண்டமெலாமகததுள்வைத்த
வரு புலனைக்குரியானையன்பருள்ளந்
தாண்டானைநற்கீராக்கருள்செய்தானைத்
தனைநினையாதவாகட்குசசேயான்றன்னை

வேண்டானைவேண்டியவா றளிப்பானறன்னை
விழிபொழியும்பெருங்கருணைவெள்ளத்தானைப்
பூண்டானைவெண்குழையைப்படையூரானைப்
போற்றுதார்பவக்கடலுட்புகுவாரன்றே. (எ)

நடையானைநானிலமூவானும்போற்றும்
கல்லானைப்பூருவபுண்ணியஞ்செய்பார்க்குக்
கிடையானைக்கிராதகுலக்கோலம்பூண்டு
கேழலினைச்செகுத்தானைக்கேடில்சூலப்
படையானைப்பரம்பரனைப்பரிதிபோற்றும்
பண்ணவனைப்பழமறைதோந்திட்டானறன்னைப்
புடையானையோங்குதிருப்படையூரானைப்
போற்றுதார்பவக்கடலுட்புகுவாரன்றே. (அ)

மூத்தானைமுதலவனைக்கருணையாலே
முனிந்தானையெதிர்ந்தார்தம்புரங்கண்மூன்றுந்
தீய்த்தானைப்புவனமெலாங்கடைக்கண்ணாலே
திகழவருள்சிறந்தானைக்கவியின்மாலை
சாத்தானைத்தானனுகாத்தன்மையானைத்
தரணியெலாந்தருவானைத்தனித்தென்னுள்ளம்
பூத்தானைவேலருளும்படையூரானைப்
போற்றுதார்பவக்கடலுட்புகுவாரன்றே. (கூ)

எங்கணுமாயிருப்பானைமருப்பொன்றுனும்
இளையானுந்தொழுவானைக்கிளையான்றன்னைப்
பங்கமிலாப்பாற்கடலுளலாந்தசெய்ய
பங்கயக்காட்டனையதிருமேனியானைத்

தங்குபுகழ்கநதகநியதனிலாடுந
தக்கோகாசகேஞானசித்திதருவானரனைப்
பொங்குபுகழ்திருப்படையூரபொருநிஞனைப்
போற்றுதார்பவக்கடலுடபுகுவாரனறே. (௧0)

திருவருட்சகாயம.

---

## அன்பினிலே.

### திருவருட்சகாயம்.

சூலேனோயதனைத்தீர்த்துநதுரிசறுவிரட்டானத், தாலயமதனுட்காட்சியளவிலவருளியநதக், காலையிலவாக்கின் மன்னனெனவு நற்கருணைசெய்தோன், சோலையாகுயில்கள்பாடுந் துய்யநற்பண்டையூரானே. (௧)

சுண்ணமும்விடமுமவேழமுஞ்சூழ்கடலினுமபல காட்சி, வண்ணமீநதிடபஞ்சூலமவகுதகுமய்பூதி சேயுங், கண்ணெதிரெழச்செயதனபாறகாசவிநதமராபேயறபு, புண்ணியமளிதனோனயிககபுகழ்படையூருளானே. (௨)

குண்டையூர்நெற்கொடுதுக்கொழுமனைத்தங் கஞ்செய்தும, பண்டையிலமுதலையுண்டபாலனை யுமிழச்செய்துங், கண்டைசேரபரவையூடல்தணித்துமபொனாற்றிலிடடும், அண்டையிலழைததோனெங்களரும்படையூருளானே. (௩)

ஒற்றியூர்தனிலுற்ற வொண்டொடிச் சங்கிலிக்
கே, யுற்றதையுரைத்துத்தம்மையுவந்த சுந்தரர்க்
குங்கூறித, தெற்றிசூழ்மகிழிலுற்றுந்தெய்வவெள
ளானையீந்தும், பற்றிலாண்டுகொண்டான்பரன்
படையூருளானே. (௪)

அம்மையாற்றிருமூலப்பா லாளுடையார்க்குந
ல்கிச், செம்மையாநதாளமுத்தின்சிவிகையும்பந்த
லீய்ந்து, வெம்மைகொணமுயலகனறோய்விடுத்
துடிபொற்கிழியுந்தந்து, தம்மைவந்தடையச்செய்
தோனறணிபபடையூருளானே. (௫)

அடியவர்விடஞ்சுரத்தையகற்றியம்மருகற்கண்
ணே, கொடியரவிடத்தைமாற்றிக்குணமறைக்கத
வடைத்தும், முடிபணிதென்னவனபான்மூண்டி
டுவெப்புநீக்கி, யடிதொழச்செய்தோனம்மை யா
ள்படையூருளானே. (௬)

அனலிடையிட்டவேடு மழிவிலாதெடுத்தப்பி
ன்னர்ப், புனலிடையோடவிட்டும் புதுமைகண்
டமணரெல்லாம், மனக்கடுமாறிமாயமகிழ்ந்துசெ
ன்றேடம்போக்கித், தினந்துணைசெய்வானெங்க
ள்திகழ்படையூருளானே. (௭)

புத்தன்பாலிடியைவீழ்த்திப்பூவாதபனைகண்மே
லும், மெத்தசெங்கனிகளேற்றிவெளிரங்கந்தனை

ப்பெண்ணுகளைச், சித்தமார்திருமணத்திற்சோகத
வரியாருகணை, விதகவருளிற்சோபபான்மிகும்
படையூருளானே. (அ)

ஆவினைமெய்பபோன்சாத்தனூரமாமூலனென
போன், சாவினுக்கிரங்கிமோதித்தத்தனித்திடுமப
சுக்கே, காவிரிக்கரையிலாதிக்கையிலையில்வாழுஞ்
சித்தா, ஆவியைக்கடத்துளிட்டானருளபடையூ
ருளானே. (கூ)

மூலனென்றிடுமபோகொண்டோனமுன்கடம
றையக்கண்டு, சாலவேயாவடுதண்டுறையரசடிக்
கீழுற்றங், கேலவேயாண்டுக்கொன்றுமிசைத்திரு
மந்த்ரமோத, ஞாலமேயுய்யச்செய்தானற்படையூ
ருளானே. (க0)

ஆதியிற்பொதிகைக்கேகுமன்புகொண்டதுபோ
ற்கண்டுங், கோதிலாஞானசித்திகுருமுனிவரனு
ற்பெற்றும், வாதிலாச்சிதாகாயத்துள்மன்னியும
பலநூற்செய்துஞ், சோதிசோலையிலேசேர்த்தா
ன்றெழும்படையூருளானே. (கக)

திருவருட்சகாயம்.

## உய்கையுபாயம்.

### திருவருட்சகாயம்.

ஞானதியர்கற்றநதொலைத்து,மேல
வாரமவைத்துவானோர்க்கருள்செய்திடும்
பாரவேலுளான்பணிகந்தமாபுரி
யூரவெனபவர்க்கூழ்வினையில்லையே. (க)

கற்றவர்சூழ்தருங்கந்தமாபுரி
பற்றியவன்பர்கள்பக்கல்வாழ்பவன்
நறறவர்தொழுமபதநணணுவாகள்வா
னுற்றராசாள்வரீதுண்மையுண்மையே. (உ)

சோதியன்மூவருந்துதிக்கநின்றிடும்
ஆதியன்கந்தமாபுரியிலெம்மையோர்
பாதியன்பாதமேற்பற்றுவோரெலாம்
வேதியனாதியர்வியப்பவாழ்வரே. (ங)

வையகத்தோர்தினமவணங்கவந்தெதிர்
ஐயமிலலன்பருக்கனைத்துநல்குவோன்
மெய்யர்சூழ்கந்தமாபுரிவிளங்குவான்
செய்யதாடுணையெனுஞ்செல்வர்செல்வரே (ச)

முந்தவேளைத்தழன்மூட்டிமுப்புரஞ்
சிந்தவேநகைசெயுந்தேவதேவனை
யெந்தவேளையுந்துணையென்றுளோர்தம்பால்
வந்தவேளையதெல்லாம்வாய்க்குமவேளையே.

அருந்தவம்புரிபவரகத்துளாரமு
திருந்திருநாட்டியவெங்கைசமுக்கணன்
றிருந்தியகந்தமாபுரியிற்செலவனருள்
தருந்துணையென்பவர்தரணியாள்வரே. (௬)

நாரணன்நான்முகனுடனேமம்படு
காரணன்கடந்தவனகந்தமாபுரி
தாரணஞ்செய்பவர்தாளிடுமபணி
சீரணங்கொடுகலைமகளுஞ்செய்வளே. (௭)

வாளைபாயும்வயற்கந்தமாபுரி
வேளைவென்றவன்விமலன்பசுபதி
தாளையுள்ளத்திற்றரிக்குஞ்சானறவர்
நாளையுங்கோளையுநனிவெல்வார்களே. (௮)

பாவலர்துதிசெயபபரிவினோடருள்
காவலன்கந்தமாபுரியுளோன்கழல
பூவலராற்பணிபுரியுமன்புளார
மேவலராலவரும்வினையைவெல்வரே. (௯)

தானவர்குலமொழித்தாளுந்தங்கைசமுன்
கானவர்போற்றிடுங்கந்தமாபுரி
யானதிலேயமர்வான்பதமர்ச்சிப்போர்
ஞானமுஞ்சித்தியுநணுகுவார்களே. (௧௦)

திருவருட்சகாயம்.

# அருண்முறை.

## திருவருட்சகாயம்

சந்தமாருந்தனிச்சாத்தனூரில்வாழ்
எந்தையேபரமேசவெற்கின்னருள்
தந்துமேமுறநந்தைரியங்காட்டிட
வந்தெனக்கோர்வரமருள்செய்வையே. (க)

விண்ணின்வாழ்வையியப்புறுமாயிரங்
கண்ணனுந்திருமாலயனுங்தொழும்
அண்ணலேசாத்தனூருறைமாதருள்
பண்ணவாநின்பதமருள்செய்வையே. (உ)

நர்த்தனேசுழிகாட்டத்திருநிருபம
பாதனேபரஞ்சோதிசொரூபனே
வேதபாரகாவேள்விசெய்சாத்தனூர்
காதனேயென்கருத்தருள்செய்வையே. (ங)

தத்துவங்களனைத்துந்தழைத்துலாஞ்
சித்தமார்சிவமாகியதெய்வமே
வித்தகாசாத்தனூரிலமிகமகிழ்
கத்தனேயென்கருத்தருள்செய்வையே. (ச)

அய்யனேதண்ணருட்கடலேவளர்
மெய்யனேபலவிணைமணியேசிகா
துய்யனேசாத்தனூரிற்றுலங்குமெண்
கையனேயென்கருத்தருள்செய்வையே. (ரு)

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

பொருந்துமுப்புரம்பொன்றச்சிரித்தமா
விருதுபெற்றுவிளங்குறுதெய்வமே
மருவுபூம்பொழில்மாசாத்தனூரநீ
கருதிவந்தென்கருத்தருள்செய்வையே. (௬)

நாட்டுளோர்நகையாவகைநன்னலம்
வேட்டுளோர்க்குவியந்தருள்மெய்யனே
சூட்டுச்சாத்தனூர்ச்சோதிநின்றுய்யநாள்
காட்டுவாயென்கருத்தருள்செய்வையே (௭)

ஓங்குசுந்தரர்க்காகவுவந்துமுன்
ஆங்குவாட்டமனைத்தையுந்தீர்த்தனை
தாங்குசீர்த்திகருஞ்சாத்தனூரவெற்
கிங்குவந்தெனக்கின்னருள்செய்வையே. (௮)

வானுதற்றிகழ்மாதர்மயக்கிலே
நாணமற்றுநலிந்திடலாகுமோ
வீணிலென்னைவிடேல்சாத்தனூருளாய்
காணவந்தென்கருத்தருள்செய்வையே. (௯)

ஒளித்திடாமலிங்குன்னன்பர்தம்மகக்
தெளித்தஞானமுஞ்சித்தியுநல்குமோர்
தளிக்குளோங்கியசாத்தனூரய்யயான்
களிக்குமவண்ணங்கருத்தருள்செய்வையே.

திருவருட்சகாயம்.

## அருட்டிறம்பகர்தல்.

### திருவருட்சகாயம்.

பத்திசெய்வரியாவரும்பலன்பெறப்படிக்கருட்
சித்தியைமுன்னாகவேதிருவருட்செய்தாள்பவன்
நித்தியநைமித்தியநிலைபிறழாவந்தணர
சித்தமாவியாக்கிரபுரத்தேவதேவதேவனே. (௧)

கலைகள்கற்றமாந்தருங்கருத்தொடுங்குமுத்தரு
ம, நிலையினிற்கவேமனத்துணிவினைத்தவாறருளியு
ந், துலையினுற்றபோர்கள்செய்யுஞ்சூட்சியின்படிச்
செய்வோன்,சிலைகளுற்றவியாக்கிரபுரதேவதேவ
தேவனே, (௨)

இறபபினற்பிறபபினுஙியலவதொன்றுமில்லை
யென, றறதெளிந்தயாந்தாபோலவரைபுகனற
மாந்தர்முன, பெறறகரியசித்தியும்பிறஙகவெற்கரு
ள்செயுஞ, சிறபபுளாவியாககிரபுரதேவதேவதே
வனே. (௩)

கோலமாமறைபபொருள்குறித்துணர்ந்தமாத
வா, ஞாலமீதிலவேண்டுவாறுநனகருள்சதாசிவன்,
சூலபாணிசடலையிற்றுலஙகுகினறசோதியன, சில
மாவியாக்கிரபுரதேவதேவதேவனே. (௪)

நிகரிலாதநிஷ்டைபெற்றநீணடகன்முழைக்கு
ளும், ககனமீதிலுமமாநதுகருணையோங்குஞ்சித்த
ர்கள், அகமசனனிலுமமுளானடியனேறகுமருள்
செய்வான, சிகரிசூழ்வியாககிரபுரதேவதேவதே
வனே. (௫)

நீதியாய்த்தவநெறிக்குணிலைத்துநின்றவன்பரு
ம், பேதிபாவுளத்தருமபெருமையோங்கவேயெ

மூந், தாதியாயசோதியாயனாதியாய்ப்பிண்டாண்டமாந், தீதிலாதவியாக்கிரபுரதேவதேவதேவனே.

பண்ணிறைந்திசைந்திடும்பாடலின்றபத்தர்தம், மெண்ணமியாவுமே முடித்தினிதருஞ்சதாசிவன், பெண்ணுமாணுமாயினன்பிறங்கவெந்தருள்செய்வான,தின்னமார்வியாக்கிரபுரதேவதேவதேவனே.

எட்டினுவிரண்டிணைர்க்கிலங்குகின்றசெல்வர்முன், அட்டமாசிதித்தியுமருள்புரிந்ததேசிகன், கட்டமாதினன்கடக்குறைதவிர்த்திடுமெய்யமர். சிட்டர்சேர்வியாக்கிரபுரதேவதேவதேவனே. (௮)

கங்குலாய்ச்செங்கதிராய்க்கதிரினுள்ளொளியதாய், மங்குல்போலவும்வரங்கள்வழங்குகின்றநாயகன், எங்குமாயுமாவுமேவியெவ்வேலைமுழேற்குமருள்செய்வான், சிங்கமாவியாக்கிரபுரதேவதேவதேவனே. (௯)

முர்த்தையானமுனிவரின்முதற்பெருந்தலைவரும், வித்தையானசித்தருமவியாக்கிரமருகன்பரும், நித்தையற்றஞானசித்திசேனற்கிங்கருள்வருஞ், சித்தையார்வியாக்கிரபுரதேவதேவதேவனே.(௧0)

திருவருட்சகாயம்.

---

வெண்பா.

எங்குநிறைந்திருக்குமேதமிலாச்சித்தர்குழாந்
தங்கக்குருவையினிற்றோன்றுதே-எங்குமுயர்
சித்தர்களும்வந்தெமக்குச்செய்பாரோவையவோ
விததலத்திலேமழையின்முன்னே.

திருவருட்சகாயம்.

---

உ

சிவமயம்.

## ஸ்ரீ ஞானசித்தர் சரித்திரசங்கிரகம்

பாண்டிவளநாட்டிலே, தாமிரபரணிதீரத்திலே, திருக்குருகூரிலே, சுத்தசைவவேளாளகுலத்திலே, அவதாரஞ்செய்து ஞானசித்தர் என்னும் பிள்ளைத்திருநாமம் பெற்று யாவு மோதாதுணர்ந்து குழந்தைப்பருவத்திற பல அற்புதமுதலிய வைபவங்களோடு வளர்ந்தும், இளமையிற்றானே துறவுபூண்டும், கயிலைப்பெருமானே தனது மான்மழுசதுர்புய காளகண்டமாதியவற்றை மறைத்துக்கொண்டு அவதாரராய்த் திருக்கோலம் வாய்ந்து திருவாலைக்காவிலெழுந்தருளிய பசைமலைசுவாமிகள் தடுத்தாட்கொள்ள, அவரையே குருநாதராக்கொண்டு, பொதியமலை, பசைமலையாதியவற்றில தனியே சஞ்சரித்தும், பதினெண்சித்தர்களுமொருவடிவாலுதென்ன இறங்கிவந்து ஞானசாஸ்திரம், யோகசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம் பலவருளியும, மணிமந்திர வவுடதங்களாற் பல்லோர் நோயபோகியும், சிலவடியார் வேண்டுகோளுக்கிசைந்து சிற்சில கிராமங்களிற் பதிகங்களோதி மழை பெய்வித்தும், தானவதரித்த புண்ணியதலத்திலே சித்தராலயம், சித்தாபாடசாலை, சாஸ்திரகளஞ்சியம், வைத்தியசாலை, அன்னதானமடம் தாபிக்கக் காலங்கருதிப் பல தலங்கடோறுஞ்சென்று ஆங்காங்குப் பல பதிகங்கள் பாடி யுலாவிவருகின்றனர்.

இங்ஙனம்:

திருவருட்சகாயம்.

# திருச்செந்தூர்ப்பதிகங்கள்.

திருக்குருகூர்

## ஸ்ரீமத்-ஞானசித்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருள,

ஸ்ரீ புவனாம்பிகை பக்தஜனசபையாரால்

சென்னை

பண்டித மித்திர யந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

பிலவ௵ இடபரவி

1901.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA-IYER LIBRARY

திருவருட்சகாயம்.

12791

# திருச்செந்தூர்ப்பதிகங்கள்

திருக்குருகூர்

## ஸ்ரீமத்-ஞானசித்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய.

ஸ்ரீ புவனாம்பிகை பக்தஜனசபையாரால்

சென்னை

பண்டித மித்திர யந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டன

பிலவ௵ இடபரவி.

1901.

# சிறப்புக்கவி.

சென்னை - அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

---

எந்தைகுரு நாதனென மொழிஞான சித்தமுனி யெவரு
மேத்துஞ், செந்திலம பதிசிவசண் முகப்பெருமான வேடடை
யுறச செவவே சொறற, செந்தமிழ்நற் றோத்திரங்க ளேப்படி
னை - வழுவாது தியானஞ் செய்யுஞ், சிந்தையினர் தமைவி
செல்லு மாமால.

---



உ

திருவருட்சகாயம்.

# திருச்செந்தூர்ப்பதிகங்கள்

"மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிரு" என்னுந்

தேவாரச்சந்தம்.

திருவருட்சகாயம்.

சநதனுசலம்பெயர்சமைழத்திட்சதழுவிளாறும்மையகழுமே
தொழும், எந்தையெம்மகத்திசனுர்தமக்கெணணில்பேரருளீயு

ந்தேசிகன், சிந்தையாரனைந்துருகுமாதவர்செயலுளால்திருச்செந்திலாதிபன், தந்தையானவன்றாயுமானவன்சரணமென்பவர்தரணியாள்வரே. (௧)

அண்டபிண்டமோடுறுசராசரமனைத்தையும்பொடிபடுத்திமைக்குமுன், சண்டமாருதத்துகளெனும்படிசாடுகினறதிணடிறலுடைப்பெருந், தண்டபாணிதெண்டிரையுலாந்திருதழைக்குஞ்செந்திலேதானமாக்குடி, கொண்டசேவகன்சரணமென்பவர்கொடியகூற்றையுநொடியில்வெல்வரே. (௨)

மலைபமாமலைமுனிவராதியோர்மருவுசூழலினமருவவீற்றிருக், தலையிலாததோக்கலைகளியாவையுமருளியட்டமாசித்தியும்பெறத், தொலைவிலாதருள்குருபரன்குகன்சோமசேகரன்காமாகாதலன், தலைமைசேர்திருச்செந்திலாதிபன்சரணமென்பவர்தரணியாள்வரே. (௩)

பொருப்பிலேதினைப்புலத்தில்வாழுமோர்பொருவில்கானவர்மகட்குமேவல்செய், விருப்பிலேமகிழ்வேலவன்மறைவேதனைச்சிறையிட்டுவாழ்பவன், கருப்பிலேவளர்தரளமார்செழுங்கழனிசூழ்திருச்செந்தில்வாழ்குகன், மருக்குலாமலர்சரணமெனபவர்வானும்வையமுமவணங்கவாழ்வரே. (௪)

மூலமேமுதலாறுமாநிலமுளைத்ததேவரின்முதல்வனெனக், கோலமாமறைமுழங்குசண்முகன்குன்றவேடுவாமருகனன்பாதர், பாவலான்திருச்செந்திலாதிபனபண்ணவன்முருகேசன்வேலனே, [illegible]னிர்சரணமென்பவர்களும்வெப்பவககடலகடப்பரே. (௫)

காதலோடும்போய்குறவர்மாமகள்கழறுமின்சொலிறகாவலானவன், வேதஞதியோர்விபுதர்கோன்முதல்வேண்டவேணடியாங்கருளும்வேலவன், தீதிலாததிருச்செந்திலின்கணேசேயிளங்கதிருதயமேனிகர், ஓதுசண்முகன்சரணமென்பவருறுதியாவையும்பெறுவரென்பரே (௬)

வரைபிளந்திடும்படிநெடுங்கதிர்வாகைவேல்விடுதோகைவாசனன், திரையெறிந்தநற்பணிலமும்பலசெம்மணிக்குவைகளு

ரிடநதொழு, நிரையுலாந்திருச்செந்தில்வாழ்குகனிமிர்தடம்பு
யதசணிகடம்பினன், விரைமலர்ப்பதஞ்சரணமெனபவர்வினை
யைவென்றுமேல்விதியைவெல்வரே (எ)

இடைவிடாதபத்தியினமிருந்தவோரிணியவனபரனைமுனிவு
கொண்டிடுஞ், சடைவிடாதகைக்காலகாலனுந்தனிமகிழ்ந்திட
ந்தாருகாசுரன், முடைவிடாதபேருடலபிளந்தவேனமுருகனை
திருச்செந்தில்வாழ்குகன், புடைவிடாவருட்சரணமென்பவர்
பொருவிலாதபொனனுலகில்வாழ்வரே (அ)

நீரிலுங்கனனடுவினுந்தினநின்றுநின்றிருந்தவமுயன்றளரா
நேரிலவந்துமேன்றகவிங்கெனைநினைவிலோர்பொருளாக நோ
க்கினுனை, சாருமன்பினுலருள்செயுஞ்சிவசண்முகனைதிருச்செந்
திலாதிபனை, பாரெலாந்தொழுஞ்சரணமேசரணென்பவர்க்கெ
லாபப்தமுமவாய்கருமே. (௯)

ஏரகநதனியாவினன்குடியெழிற்றிருப்பரங்கிரியுமாடலார்,
சாரலும்பழமுதிருஞ்சோலையுநதழைகருஞ் செந்திலுந்தானமா
கக்கொளுநு, சீர்தருஞ்சிவஞானதேசிகனறெயனநாயகனைசரண
மெனபவா, நேரகம்பெறஞானசித்தியுநினைவினலகுவார்நிமல
ராவரே. (௧௦)

திருவருடசகாயம்.

---

"பந்தத்தால்வந்தெப்பால்" என்னுந் தேவாரச்சந்தம்.

---

## திருவருட்சகாயம்.

செம்பொற்சீ ரும்பர்கசே பொருந்துசங் கடங்களைச்
சேரா வாறே தீராநற் றிரமருள்புரிகுழகன்
நம்பிப்போய் முன்புற்றே யலர்ந்தசெங் கடம்பணி
நாதா போதார் பாதாவென் றிமெவருளநிறைபொன்
கம்பத்தே யன்பற்கா விருந்துவந் தசிங்கமென
காரார் சீரார் மாயோனா கவினுறுமருமகனும

வமபுற்றூர் கொம்பிற்பா யுமந்தி துன்றுசெந்திலில
வாழ்வோ னேரார்பேரார வளர்சர வணபவனே.          (க)

வட்டப்பார் முட்டப்போ யலைந்தலைந் திரந்துளம்
மாயா தேலே லாதேயென் றொருமுறை புகறருமோர
சிட்டாகவே முட்டற்ற சுகங்களும்பதங்களுந
தேயா வாறே யீவானரு சிவகுருபரமுருகன்
தட்டப்பேர் பெற்றெப்பா லினுங்கொடு திறம்புரி
சூராடாமே நேராடித தொலைவுற வயில்விடுவோன
மட்டுப்போய வெட்டிபபாய தடந்திகழ்ந்த செந்திலில
வாழ்வோன் வானோர் சூழ்சீரே வளர்சரவணபவனே (உ)

கொங்குறுமா கொன்றைப்பூ வலங்கலுந தரங்கமரா
கோடாநீரார் மாவேணிக குளிர்மதி யணிபரனா
பங்கிறசோ சொந்தககா ரிகனகொளுங கவினபெறு
பாலாலோலா வாளாயென் றடிமலா பணிபவரை
இங்குக்கா லன்பற்று துவந்துதன் பதமபெற
வேகா வாகா ராறேபோ லினிதருள்பொழிமுருகன
மங்குறறு வும்பொறமகோ யிலுநதுசெந்தி லனகுகன
வாழவா ராவா வாயோத வளாசரவணபவனே.          (ங)

முறறத்தேர் வாக்கதோரா தொழூஉந்தொறுங கனிந்துள
மூவாநீரார் பாராள முறைதரவருள புரிவோன
பறறிப்போய் வெற்பிற்சார் பிருந்திடுங கருங்கணணை
பாலேதேனே நேரோதும் பணிமொழி குறமகளசோ
வெற்றிததோள வைத்திட்டே கவின்றிகழ்ந்த செங்கதிா
வேலாசீலா மேலாவென றருமறை புகழ்முருகன்
வறறற்றே சுறறிச்சா கரந்துலங்கு செந்திலவாழ்
வாரார் தாரார்சீர்மேவி வளாசரவணபவனே.          (ச)

வைகதுட்டோ யிச்சித்தே பரிந்திடும் புலன்களைப்
பாராவோரா மீளாநற் பதமுறு தவமுயல்வோர்
கைக்குட்சேர் கைக்குப்போய்க் கலந்திடும் பரமபரன்
கானேதானே காணேவக் கடைநடை யுறகிழவன்

வைதகுட்டப்பூ சத்திற்கே தவம்புகழ்ந் திடுமபடி
சாறேறுவாதே யார்யாருந் தகுவர முறவருளவோனை
வைகைகுட்பாய் புட்பககா நெருங்கு செந்திலினகனே
மாறுதேசேர் வாழ்வார வளர்சர வணபவனே (௫)

கணகெட்டே புணபட்டே கனைந்துளந் தளர்ந்துபோய
காரே நேரார் தாராகூந் தலழகில வழுமவனைத
திணைக்ககா லனவெறுட்டே நடுங்கவும படுமபடி
சீறுநேரே வாதானோ சிரகிரிவளர் குமரனை
கொணகற்கா னுமபெட்பா லிடஞ்செறிந திருநதவனை
கூராவாராய சீராளாவென் றிடவரு மொருவடிவனை
வணகட்டோர் வணங்கி கடமபணிந்த செந்திலவாழ
வாகாவாகோ ரீராறுய வளர்சர வணபவனே (௬)

கொஞ்சிப்பே சுஞ்சொற்கே குழைந்துநைந்துளந்தளி
கூசாதேநே ருடாடுங் குறமகள் மகிழ்கொழுநனை
நஞ்சிபபா ருமபாகசோ நலிநதுபொன றிடுமபடி
நாடாமேயாா மாசேவ னலமிகு குமரகுகனை
கஞசபபூ மணடிச்சோ கவினறிகழ்ந்திடுநதடங
காணோராமீ ராறுய கரசரணமு முடையோனை
மஞ்சுறறுர் தஙககசோ புரஙகளாரந்த செந்திலின்
வாழ்வோ னாழ்தான சாராதே வளர்சரவணபவனே (௭

உணடிககே முநதிபபோ யுழனறுளந தளாந்தினம
ஒராநேரா பேரோதி யுளஙா யலைததலறக
கணடிட்டே தொழுமபருண மகிழநதிடுஞ் சுகநதரும
காரே நேராா தாராளன கதியருள கடவுளவனை
தணடிததே கணடிபபோன கநதைதன றயனரனை
தாராா வானோ கோமானுஞ் சதமகனுநைபுகழோனை
மணடிப்பாய சிநதுபபால் வளமபொருநது செந்திலன
மாதா வேபோல் வான்வேலோன வளர்சர வணபவனே

சிடடர்க்கே மட்டற்ற திறம்பகர்ந் தருள் செயுஞ்
சீராநீறா பேரோதுந திருவருணையபதியில்

குட்டத்தசாற் றட்டெட்டே குளழுந்தள கவிந்திடுங்
கோதார் மோகா கோவாதே கொளுமொருபுலவனையுந்
கிட்டத்தே தட்டிட்டே கிஞ்சுகமெனக் கொளுசிக
கீழெனீழா தாளாக்கிக் கிருபைசெய யறுமுகனை
மட்டிட்டே யிட்டார்க்கே மகிழ்ந்தருள செய்செந்திலின்
மாதேபாதி யோதாரும் வள்சர வணபவனே. (௬)

பதிக்கே முத்திப்பா லூறுஞ்சுகம் பொருந்துறும
பாழாகாதோ யாதேநம பதமலர் தொழுகெனஞா
னதிற்கே சித்திக்கே நலங்கிளர்ந திடுநகலை
நாவார் பாவா லேயோதா நணியருள் புரிமுருகனை
புதராக்கா பத்துற்றே கெடுந்திறந் தெரிந்துசெய்
போதார் காவே சீராரும் புகலியர் நினைவருளவேனை
மதசத்தே யத்தத்தோக் கிளங்குழந்தை செந்திலனை
மாயா வாழ்வே சாரார்வாய் வளர்சர வணபவனே (௭)

திருவருட்சகாயம்.

---

## "மாதர்மடப்பிடியு" என்னும் யாழ்மூரித் தேவாரச்சந்தம்.

---

திருவருட்சகாயம்.

மாலயனும்மறையும் பல மாதவயோகிகளும
மனத் தினி னினைத் திட வரமருளெம்பெருமானை
வேலவனீலமயில் தனில வேகமுடனெழுந்தோன்
விரும் பிமை யவர் தமை வேண்டியளித்தருள்வோன்
ஆலமுண்டன்றழியா தங் கமரரைக்காத்தவனுக்
கனுக் கிர கமும புரி யாறுமுகப்பெருமாள்
ஞாலமெலாம்புகழுந் திருச் செந்தினகருறைவோன்
நமக் கருள் செயத் தகு நானையுணர்ந்திலனே. (௧)

பூவலர்சந் தனமா மலைப் புண்ணியனென்னறிய
புனி தருக் கருள் செயும பூங்கமலபததனோன
தேவரெலாந்தொழுமேவோர் தெய்வ யானையினறன் கொழுநன்
சிலை வளைத தவு ணரைச் சிரிததழிததோனருளசேய
மேவருசங்கினங்கள பொழி வெண்கதிர்முததமுலாம
வியன் மதிற் புறந திகழ் மேதகுசெந்திநகர்
நாவலன்றனபொதிகைப் பதி நாதாககருள்புரிவோன
நமக் கருள செயத தகு நாளையுணர்ந்திலனே. (உ)

பூதமோரைந்தாகி யொளிர் புவனமெலாநடத்தும
பொருளிது வென மறை போற்றிநினறேத்துயலாப்
பாதமுளானலமயாள் தரு பனனிருதோளுமுளான
பூ[illegible]ா தரு மகள் மகிழ் பசிளங்கிளளையுளோன
[illegible]தக்குறமகளா ருட னிததமகிழ்ந்தருள்வோன
நிலைத இடு மவர்க் கரு ணையமுடனளிப்போன்
நா[illegible]மொவுதிருச செந்தி னன்னகருற்றுறைவோன
நமக கருள் செயத தகு நாளையுணாந்திலனே. (௩)

சந்தத்திருப்புகழு மிகு தாளிசையும்பலவாந
தமி ழறிந துவனைத் தினஞ் சாற்றும்பெருமபுலவோர
ரந்ததத்திசையுளரோ வென றிருக்குநினைஞராருணமுன
னெளி யனே னெது முண ராதிங்குளாததமிழ்[யைத
சொநதததிருச்செவிக்கே சறறத தோறறியென்றனகுறை
தொலைத தருட் கடற குளே சுகமபெறச்செயவதெனறு
நந்ததினங்கொழிகடுந தர ளஙதிகழ்செந்திலுளான்
நமக் கருள செயத தகு நாளையுணர்ந்திலனே (௪)

மந்திரமொன்றறியேன் மணி மாமருந்தோவறியேன்
மரித் தவ ரெழுந் திட மனதிலிளைக்கறியேன்
தநதிரமொன்றறியேன் சர்வ லோகமெலாமகவே
சரண புக வெனச் செயச் சததியமாய்நினையேன
இந்திரஞ்ஞதியராய் விண் ணிருநதரசாளவுமே
யிறை யள வெனும் மனத தெணணியுமேயறியேன்

நந்திருத்தற்பெரியோர் தின நாடியசெந்திலுளான்
நமக் கருள் செயத் தகு நாளையுணர்ந்திலனே. (ரு)

மலமறுமாறுணர்ந்தோ ருளம் வாழுங்குகப்பெருமான்
மதி ரவி சுட ரென வயங்கியப்பாலொளிருந்
நலமிருமூன்றிலுளான் சகத் திரதளமேலமருஞ்
சர வண பவ னெனை த தாங்கியதேசிகனும்
பலமிகுசித்தர்களும் அருட் பத்தர்களும்பரவப்
படைத் தளித தொழித் திடும் படியருளெம்பெருமான்
நலமிலனுயடியே னுளத் தும்நலமேபுரிந்து
நமக் கருள் செயத் தகு நாளையுணர்ந்திலனே. (சு)

எண்ணியதோ றமுளான் கண் ணிரண்டினுமெங்கணுமா
யெவற் றினும் புலப் பட விலங்கிடும்வேலனமுருகன்
புண்ணியமாந்தவத்தோர புதி தாந்தமிழ்சாற்றிநிற்கப
புக ழுட னரு ளுமே பூரணயாயருளி
கண்ணியராகியுமே நற் கதிதருஞ்செந்திலுளான்
கரு ணைசெய் தென துமுன் காட்டுமுறைப்படியே
நண்ணியநாயடியேன் றின நாடும்வண்ணந்தயவா
னமக் கருள் செயத் தகு நாளையுணர்ந்திலனே. (எ)

பொற்புறுமெய்யடியா ருனைப் போற்றியசெந்தமிழின்
பொரு ளறி கிலா தவர் புகன்றவிதமுணரா
தற்பர்கள்வாய்மதத்தாற் சொலு மவ்வசனத்தைநம்பி
யடி யவர் முன மறி யாமையினுலுரைத்தாற்
சற்புடையார்கசிநும் பல கவிசொலவுமவர்க்காங
கதி யருள் புரி யவுங் காட்டியதேசிகனே
நற்புகழோர்துதிக்குந் திருச் செந்திநகர்க்கிறைவன்
நமக் கருள் செயத் தகு நாளையுணர்ந்திலனே. (அ)

செங்கோடெனுமலைமேற் செகம் யாவையுமேயறியத்
திரு வருள் புரிந் தெலாந் திருப்திசெய்தாண்டதுவும்
பொங்கியபாலாற்றின் னடுப் புகுக்கியபந்தலதிற்
பூவை யனேன் முதற் பல பூசுரர்க்குந்தயைசெய்

தங்குகந்தாண்டதுவும் பிறு மவ்வகைமையங்களு
லருள் புரிந் தது மூன தன்புளமேயறியும்
நங்கள்தவப்பயனும் நல மேவியசெந்திலுளான்
நமக் கருள் செயத் தகு நாளையுணர்ந்திலனே. (௯)

பண்ணிசைதானறியாப் பத ராகியவென்றனையும்
பா டிடும் படி செய்கென் பங்கிலமர்ந்தருளி
மண்ணிலுளார்பலருந் தினம் வாழவருள் புரிந்தோன்
வா ரணந் தகர் மயில் வாகனமாயுடையோன்
பெண்ணினல்லாரிருவ ரிடை பிரியமுடனமர்ந்தோன்
பிர மனோ டரி யரன் பேசுமுதற்கடவுள்
நணணியசெந்திநகர் தனின் ஞானமுஞ்சித்தியுமே
நமக கருள் செயத் தகு நாளையுணர்ந்திலனே. (௧௦)

திருவருட்சகாயம்.

---

திருச்செந்தூரப்பதிகங்கள்

முற்றியன

---

வெண்பா.

---

எங்கு நிறைந்திருகரு மேதமிலாச் சித்தாகுழாந்
தூங்கக் குருகையினிற் றோற்றுரா—விங்குமுயா
சித்தாகளும வந்தெமக்குச செப்பாரோ வையவோ
வித்தலத்தி லேழையின்முன் னே.

திருவருட்சகாயம்.

---

உ

# திருவருட்சகாயம்.

# இந்நூலாசிரியர் சரித்திரசங்கிரகம்.

பாண்டிவளநாட்டிலே, தாமிரபரணிதீரத்திலே, திருக்குருகூரிலே, சுத்தசைவ வேளாளர் குலத்திலே, அவதாரஞ்செய்து ஞானசித்தர் என்னும் பிள்ளைத்திருநாமம் பெற்று யாவுமோதாதுணர்ந்து குழந்தைப்பருவத்திற் பல அற்புத முதலிய வைபவங்களோடு வளர்ந்தும், இளமையிற்[illegible] துறவுபூண்டும், கயிலைப்பெருமானே தனது மான் மழு சதுர்ப்புயங் காளகண்டமாதியவற்றை மறைத்துக்கொண்டு அர[illegible]த ராய்த் திருக்கோலமவாய்ந்து திருவானைக்காவிலெழுந்தருளிய பச்சைமலைச் சுவாமிகள் தடுத்தாட்கொள்ள, அவரையே குருநாதராகக்கொண்டும், பொதியமலை, பச்சைமலையாதியவற்றில் தனியே சஞ்சரித்தும், பதினெண்சித்தர்களு மொருவடிவானரென்ன இறங்கிவந்து ஞானசாஸ்திரம், யோகசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம், பலவருளியும், மணிமந்திர வவுடதங்களால் பல்லோர் நோய்போக்கியும், சிலவடியார் வேண்டுகோளுக்கிசைந்து சிற்சில கிராமங்களில் பதிகங்களோதி மழைபெய்வித்தும், தானவதரித்த புண்ணியத்தலத்திலே சித்தராலயம், சித்தர்பாடசாலை, சாஸ்திரக்களஞ்சியம், வைத்தியசாலை, அன்னதானமடம் தாபிக்கக் காலுங்கருதிப் பல தலங்கட்கோளுஞ்சென்று ஆங்காங்குப் பல பதிகங்கள்பாடி யுலாவிவருகின்றனர்.